1513

தொகுதி 6.] 1927௵ ஆகஸ்ட்மீ 1௳ [பகுதி 7.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆம் பிப்ரவரி மீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறு மாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவு பெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" ;"பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்ட ஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று 1927ஆம் ஜனவரி மீத்திலிருந்து கற்பகச்சோலையின் அற்புதக் கொலை என்ற நாவல் தொடங்கப்பட்டு சென்ற ஏப்ரல் மாதத்தோடு முடிவுபெற்றிருக்கிறது. இப்போது கடற் கொள்ளைக்காரன் என்ற நாவல் ஆரம்பமாகி நடந்து வருகிறது. முடிவான ஐந்து நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. 1927-ம் வருஷத்திற்குப் புதிதாகச் சேரும் சந்தாதாரர்களுக்கு 1927ஆம் ஜனவரி மீத்தில் தொடங்கப்பட்ட "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காததலால் அவர்கள் சந்தாத் தொகையில் கூட 4 அணா சேர்த்து ரூ. 2—12—0 அனுப்பிவிட்டால் அந்த சஞ்சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். 1928ஆம் ஜனவரி[illegible] வரை வெளிவரும் மற்ற நாவல் சஞ்சிகைகளும் அனுப்பப்படு[illegible] இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்ட[illegible] அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ மு[illegible] பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி மீ ஆரம்பமே இச்[illegible]கைக்கு வருஷ ஆரம்பம்: எப்பொழுது சந்தாதாரராகச் சே[illegible]லும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு[illegible]சப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—[illegible]

வெளி நாட்டிற்கு „ 3—0—[illegible]

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்[illegible]**

| | | |
|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4[illegible] |
| பவளத்தீவு 2 பாகமும் | „ | 3[illegible] |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | „ | 9[illegible] |
| **அர்ஜுனஸிங், சுந்தர்** | „ | 0[illegible] |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்ட ஜெ[illegible] | | |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | [illegible] |

[illegible]ளர்: "ஆனந்த நிலையம்." தபால்பெட்டி [illegible]

நிரபராதியாகிய ஒரு பெரிய ஜீவனை வழி தெரியாமல் ஆபத்தானவிடத்தில் வந்து சிக்கிக்கொண்டதைச் சித்திர வதை செய்து கொல்வதை யொரு பெரிய கேளிக்கையாகக் கருதும் இரக்கமற்ற முரட்டு நாகரீகமுடைய இச்சனங்கள் கரையிலிருந்தும் படகுகளில் கடலிற்சென்றும் அதைத் தாக்கத் தொடங்கினர்கள். சித்திரவதை செய்து என்று ஏன் கூறநேர்ந்ததெனின் மற்றப்பிராணிகளைப்போல் ஒரே வெட்டினல் அல்லது குத்தினல் அது இறக்கக்கூடியதல்ல. துப்பாக்கி பீரங்கி அக்காலத்தில் கிடையா. இவர்கள் தூரத்திலிருந்தபடி நீண்ட கயிற்றில் கட்டப்பட்ட எரியீட்டியைப் பலங்கொண்டமட்டும் வீசி அதன்மேலெறிவார்கள். அது அப்பிராணியின் தேகத்தில் பாய்ந்து விடும். அதை மறுபடி இழுத்தால் வராது. ஏனெனில் அந்த ஈட்டியின் முனையில் இருபுறங்களிலும் பின்னேக்கிய அலகுகள் இருக்கும். கயிறுமட்டும் இவர்கள் கரத்திலிருக்கும். திமிங்கிலம் ஜலத்தில் எவ்வளவு தூரம் சென்றலும் இவர்கள் கயிற்றை விட்டுக்கொண்டிருப்பார்கள். இப்படிப் பல காயங்கள்பட்டு, சில காயங்கள் அதன் தடித்த தோலையூடுருவி நுட்பமான பாகங்களில் பட்டு இரத்தம் வெளிப்பட்டு அது களைப்படைந்து சக்தியற்றுப் போனபின் அதனைக்கரைக்கு இழுத்து வந்து கோடரிகளால் வெட்டிக் கொல்வார்கள்.

இந்த வேட்டைக்கூட்டத்தில் சேர்கிறவர்களுக்கு பிராணபத்துண்டு. எப்படியெனில் திமிங்கிலம் அடிபட்டு அதனல் அதற்கு வேதனையுண்டாகும்போது அது பயங்கரமாகச் சத்தமிட்டுத் தன் வாலால் நாற்புறங்களிலுமடிக்கும். அச்சமயம் வேட்டையாடுவோர்களின் படகுகள் அதன் வாலில் சிக்கினல் தூக்கி ஆகாயத்தில் எறியப்

படும். இப்படி மடிந்தோர் அனேகர். தலைவனாகிய தைரியநாதன் மற்ற பேரை நோக்கி "இவ்வேட்டையில் யார் தைரியமாய் உயிருக்குத் துணிந்து வேலை செய்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் அதிக வேட்டைப் பொருள்களில் சமபாகமளிக்கப்படும்" என்றான்.

திமிங்கிலத்திற் கிடைக்கும் பொருள்களே வேட்டைப் பொருள்களாம். அதன் எலும்புகள் பலவேலைகளுக்கு உபயோகப்படும். அதன் கொழுப்பிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் ஒருவித விலையுள்ள வியாபாரச்சரக்கு. அதன் முதுகெலும்புக் கணுக்களிலிருந் தெடுக்கப்படும் ஒருவித எண்ணெய் ஓர்வித மதுபானமாக அந்தத் தீவாரால் அருந்தப்படும். அதோடு ரொட்டியில் தடவிக்கொள்ளும் வெண்ணெய்க்குப்பதில் அந்த எண்ணெயகப்பட்டால் அவர்கள் அதையொரு அபூர்வப் பொருளாக மதித்து அருந்துவார்கள். அதன் துர்நாற்றம் அவர்களுக்கு மிக்க மணமாகத் தோன்றும்.

இனி இக்கோரமான கொலைபாதகத் தொழிலைப்பற்றி விவரமாகக்கூற நமக்கு விருப்பமில்லை. நமது கதைக்கு வேண்டிய விஷயத்தை மட்டில் கூறிக்கொண்டு செல்வோம். இந்த வேட்டைக்காரக்கூட்டம் கரையில் சிலரும் படகில் ஏறிக் கடலில் சிலருமாகத் திமிங்கிலத்தைத் தாக்கத் தொடங்கினார்கள். அனேகம் எறியீட்டிகள் அதன் தேகத்தில் பாய்ந்தன. ஒருசமயம் அது காயம்பட்டதால் கோபம்மூண்டு மூச்செறிந்தபோது இரத்தம் கலந்த கடல்நீர் வானத்தில் பிரம்மாண்டமான ஸ்தம்பம்போல் எறியப்பட்டு அருகிலிருந்த படகுகளில் வீழ்ந்து சில படகை முழுகச்செய்தது. அப்போது தைரியநாதனும் கிருஷ்ணப்பனும் பூராவாக நனைக்கப்பட்டுத் தப்பினது தம்பிரான்

புண்ணியமென்று கரையில் குதித்துப் பிறரால் மிதிக்கப் பட்டு மெதுவாகச் சமாளித்தெழுந்தார்கள்.

திமிங்கிலம் நெடுநேரம் ரோஷத்தோடும் கோபத்தோடும் போராடியது. ஆனால் வர வர அதன் பலங் குறையத் தொடங்கியது. அதைக்கண்ட தலைவனாகிய தைரியநாதம் பிள்ளை "ஓ வாலிபர்களே! இதுதான் சமயம். அதன் ஆத்திரம் இப்போது அடங்கியிருக்கிறது. துரிதமாய் நெருங்கித் தாக்குங்கள்; இரவிற்குப் பருக அதன் ருசிகரமான எண்ணெயை எதிர்பார்த்துக்கொண் டிருப்பவர்கள் இங்கே அனேகர் இருக்கிறார்கள். எல்லப்ப பிள்ளை நெருங்கிவரும் மழைகாலம் முழுதும் நமக்கு எண்ணெய்க்குக் குறைவில்லை யென்று நம்பியிருக்கிறார். சீக்கிரம் தாக்குங்கள்" என்றான்.

தலைவன் வார்த்தையைக் கேட்டதே யாவரும் உற்சாகத்தோடு தங்கள் ஆயுதங்களைக் கரத்தில் பற்றித்தாக்க வழிபார்த்தார்கள். அச்சமயம் நமது முருகப்பன் மனதில் ஒருவித உற்சாக முண்டாயிற்று. அது பொறாமையால் உண்டாகியது. அதாவது இந்த விஷயத்தில் நாம் குலசேகரனைக் காட்டிலும் தைரியசாலி, கெட்டிக்காரன், உயிருக்குத்துணிந்து வேலைசெய்யும் தீரன் என்று பெயரெடுக்க வேண்டும் என்ற தீட்சணியமான எண்ணமுண்டாயிற்று. அதனால் அவன் தன்னிடமிருந்த பலம் பொருந்திய எறியீட்டியைத் தன் முழுப்பலத்தோடும் ஓங்கி யெறிந்தான். அப்படிச் செய்வதில் அத் திமிங்கிலத்திற்கு ஊடுருவிய ஆழ்ந்த காயம்பட வேண்டுமென்ற நோக்கத்தால் தன் படகைக் கூடியவரையில் அதன் சமீபத்தில் செலுத்தியிருந்தான்.

அவ்வாறு அவன் எறிந்த ஈட்டி அதன் தடித்ததோலையூடுருவிக்கொண்டு தேகத்தின் நட்பமான பாகத்தில் தாக்

கியதுபோ லிருந்தது. அதனால் அது துள்ளித் துடித்துப் பதைபதைத்துப் பயங்கரமான சத்தமிட்டு இரத்தத்தையும் கடல் நீரையும் ஆகாயத்தில் நெடுந்தூரம் வீசித் தன்முழுப் பலத்தோடு பாய்ந்து கடலைநோக்கிச் சென்றது. அச்சமயம் ஒரு பிரம்மாண்டமான அலை கிளம்பி வந்ததால் திமிங்கிலம் சுலபமாய்ச் சலசந்திவழியாய்ப் பாய்ந்து அகன்ற கடலில் பிரவேசித்து விட்டது. அப்படிச் செல்லும்போது தன்மேல் எறியப்பட்டிருக்கும் எல்லா ஆயுதங்களையும் கயிறுகளோடு இழுத்துச் சென்றது. அதுமட்டுமல்ல; கோபத்தால் அது வாலைச்சுழற்றி யடித்தபோது சமீபத்திலிருந்த முருகப்பன் படகு நெடுந்தூரம் ஆகாயத்தில் தூக்கியெறியப்பட்டது.

கடல்நீர் மேகப்படலம்போல் ஆகாயத்தில் எறியப்பட்டபோ துண்டான மறைவாலும் மற்ற குழப்பங்களாலும் சிலரே - மிகச்சிலரே முருகப்பன் படகிற்கு நேர்ந்த ஆபத்தைக் கண்டார்கள். மறுவிநாடி அப்படகும் அதிலிருந்த ஆட்களும் ஆகாயமார்க்கமே போய்விட்டார்களென்பதாவது, கீழே கடலில் வீழ்ந்தார்களென்பதாவது தெரியாமல் அக்காட்சி யொருஜாலக் காட்சிபோல் அவர்களுக்குத் தோன்றியது. அவர்கள் ஆ என்று அலறினர்கள். ஆனால் மறுவிநாடியே அவர்கள் நாட்டம், யாவற்றையும் இழுத்துக்கொண்டு கடலுக்குள் செல்லும் திமிங்கிலத்தின்மேல் நாட்டப்பட்டது.

---

## 24-வது அத்தியாயம்.

அத்தீவின் தலைவனும் அந்த வேட்டைக் கூட்டத்தின் தலைவனுமாகிய தைரியநாதம்பிள்ளை திமிங்கிலத்தின் எண்ணெய் கிடைக்குமென்று மிக்க ஆவலோடு நம்பியிருந்த எல்லப்பப் பிள்ளையை நோக்கி, “ அய்யா ! உமது

எண்ணெய்ப் பீப்பாய்களெல்லாம் அதோ கடலில் மிதந்து நீந்திச் செல்கின்றனவே. நீர் பதிலுக்கு ஆட்டுக்கொழுப் பைத்தான் உமது ரொட்டிக்குத் தடவிக்கொள்ள வேண் டும்; மாரிக்காலத்தில் தீபமின்றி இருட்டிலேயே யிருக்க வேண்டும்'' என்றார்.

எல்லப்பபிள்ளை:—''சேசே! நான் மறுபடி இந்தத் திமிங்கில வேட்டைக்கு வந்தால் அந்தத் திமிங்கிலத்திற்கே என்னை யிரையாக அளித்துவிடும்'' என்று மிக்க வெறுப்போடு மொழிந்தான்.

அச்சமயம் பைரவி கிருஷ்ணப்பன் சுற்றுமுற்றும் பார்த்து, ''ஓகோ! நமது முருகப்பன் எங்கே?'' என்று கூவினான்.

உடனே யாவர் திருஷ்டியும் கடலின்மேல் வீழ்ந்தன. படகு எறியப்பட்டபோது ஸ்மரணையிழந்த முருகப்பன் மேலிருந்து கடலில் வீழ்ந்ததும் நீந்த உணர்ச்சியின்றி அலைகளில் அல்லற்படுகிறான் என்பது தெரிந்தது. கடலில்முழுகி யிறக்கப்போகும் ஒருவனுக்கு உதவிசெய்பவன் ஆபத்திற் குள்ளாவான் என்ற மூடக்கொள்கை அத் தீவாருக்குள் இருக்கிறதைப் பற்றி முன்னமே கூறியிருக்கிறோம். ஆகையால் முருகப்பனது நிலைமையைக் கண்டதே ஜீவகாருண் யத்தோடு முன் வருபவர்கள் அருமையாகவே யிருந்தார்கள். ஆயினும் அத்தகைய மூடக்கொள்கையைச் சட்டை செய்யாமல் ஜீவகாருண்யத்தையே மதித்து நடப்பவர்கள் அக்கூட்டத்தில் இல்லாமலில்லை.

இரண்டு மூன்றுபேர் அவனைக் காப்பாற்றத்துணிந்து கடலில் பாய்ந்தார்கள். அப்படித் துணிந்தவர்களில் முதலாவது ஆள் பைரவி கிருஷ்ணப்பன். அவன் அருகிலிருந்த சிறு மணல்மேட்டின்மேல் ஏறிக் கடலில் பாய்ந்து குதித்தான். ஆனால் அச்சமயம் ஒரு முக்கியவிஷயத்தை மட்டும்

மறந்து விட்டான். அதாவது தனக்கு நீந்தத்தெரியாதென் பதை மறந்துவிட்டுக் கடலில் குதித்து முதல்தரம் முழுகிய போதே யுணர்ந்தான். கடைசியில் அவன் கரைவந்து சேர்ந்தது தெய்வகதியே யெனலாம்.

இரண்டாவதாக தைரியநாதம்பிள்ளை அச்சமயம் முரு கப்பன் மேலிருந்த வெறுப்பை மறந்து கடலில் பாயப்போ னன். அதைக்கண்ட அவனுடைய காரியஸ்தன் அவன் கரங்களைப் பற்றிக்கொண்டு "அந்தோ! தாங்கள் இத்த கைய காரியத்தில் பிரவேசிக்கலாகாது; யார் இறந்துபோ னலும் இத்தீவின் தந்தையாகிய தங்களுக்கு ஆபத்து நேர லாகாது" என்று அவரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண் டான். தைரியநாதம் பிள்ளை அவன் தடுத்ததைப் பொருட் படுத்தாமல் கடலில்குதித்தேயிருப்பார். ஆனல் அச்சமயம் குலசேகரன் கடலில் பாய்ந்து முருகப்பனைப் பிடித்துக் கொண்டு மிதப்பதைக் கண்டதால் பேசாம லிருந்தார்.

முருகப்பனுக்கு நேர்ந்த ஆபத்து நீங்கியதென்று தெரிந்ததே தைரியநாதம்பிள்ளை தன் காரியஸ்தனை யுதறித் தள்ளிவிட்டு, "நீ என்ன முட்டாளாக விருக்கிருய்; யாரோ ஒரு அன்னியப் பயலுக்காக என் பிராணனை நான் ஆபத் திற் குள்ளாக்குவே னென்று கருதிவிட்டாய்; ஏ மூடமே" என்ருர்.

அவர் அப்படி வெளிக்குக் கூறினும் அவர் பார்வை மட்டும் கடலோரத்திவ் இருந்தது. அங்கு முருகப்பன் கரைக்குக் கொண்டுவரப் பட்டதும் யாவரும் அவனைச் சூழ்ந்து தக்கசிகிச்சை செய்துகொண் டிருந்தார்கள். முரு கப்பன் அப்போது தான் மெதுவாய்ச் சமாளித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். அதைக்கண்ட தைரிய நாதன்பிள்ளை "மூடர்கள், அவனுக்கு முன்னே கொஞ்சம் பிராந்திகொடுத்துத் தேகத்தில் சூடுண்டாகச் செய்யாமல்

என்ன செய்கிறார்கள்" என்றுகூறி அவ்விஷயத்தில் சற்றும் அக்கரையில்லாதவர்போல் அந்த இடத்தை விட்டு அப்புறம் சென்றார்.

ஆடவர்களெல்லாம் வேட்டையாடச் சென்றபோது மாதர்களும் போய்க் கரையிலுள்ள மேடுகளில் நின்று வேட்டை யாடுவதைப் பார்த்துக்கொண் டிருப்பார்கள். அவ்வாறே யிப்போதும் மீனுள் புனிதம் முதலியவர்களும் அங்குவந் திருந்தார்கள். முருகப்பனுக்குநேர்ந்த ஆபத்தை யவர்கள் அறிந்ததே மீனுளின் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது. புனிதம் அடிக்கடி அலறிக்கூவினுள். அங்குவந்திருந்த மற்றமாதர்கள் அவர்கள் விஷயங்களை யறிவார்கள்; அதாவது முருகப்பனும் அவன் தந்தையும் அவர்கள் வீட்டில் வந்து வசித்துக்கொண் டிருந்ததும், அப்போது மீனுளும், புனிதமும் அவனிடம் நட்புக்கொண்டாடி யிருந்ததையும், அவர்கள் இருவரில் ஒருவரை யவன் மணம்புரிந்து கொள்வானென்று தாங்கள் நம்பியிருந்ததும் அவர்களுக்கு நன்றாகக் கவனத்தில் இருந்தன.

ஆகையால் இப்போது புதிதாக இக்குலசேகரன் என்பவன் வந்திருந்தாலும் அவனோடு அவர்கள் சலகரணையாக நடந்துகொண்டிருந்தாலும் முருகப்பனிடம் இருந்தபழைய நட்பு அவர்கள் மனத்தினின்றும் நீங்கவில்லை யென்று அம்மாதர்கள் பேசிக்கொண்டார்கள்.

முருகப்பன் ஆபத்து நீங்கிச் சற்று சுகமடைந்து நிமிர்ந்து உட்கார்ந்தபோது அவனருகில் கிருஷ்ணப்பிள்ளையும் இன்னும் இருவர்மட்டுமே யிருந்தார்கள். குலசேகரன் சற்று எட்ட நின்றுகொண் டிருந்தான். அவன் தேக முழுமையும் நனைந்து நீர்சொட்டிக்கொண் டிருந்தது. அவன் முகத்தில் இருந்த குறி ஒருவிதமாக விருந்தது. அக்குறியில் பெருமையும், ஏதோ ஒரு நன்றிக்குப்பதில் நன்றி

செலுத்தி விட்டேன் என்று கூறுவதுபோன்ற அகங்கார மும் இருந்தன. அதாவது முன்பு முருகப்பன் கப்பற் சேதத்தினின்றும் தன்னைக் காப்பாற்றியதற்குப் பதிலாகத்தான் அவனை யிப்போது காப்பாற்றியதால் தன்கடமை தீர்ந்து விட்டதென்று நிம்மதியோடு கருதியவன்போல் தோன்றியது. தனக்கு அவன்மேலிருந்த வெறுப்பை யிது காறும் விதியின்றி யடக்கிக்கொண் டிருந்தது போலும் இப்போது அக் கட்டிலிருந்து விடுபட்டதால் நிம்மதி யடைந்ததுபோலும் தோன்றியது.

அதற்குள் பைரவிகிருஷ்ணன் முருகப்பனை நோக்கி "குலசேகரனே யுன்னைக் காப்பாற்றினான்" என்றான். அம்மொழிகளைக் கேட்டதே முருகப்பன் மற்ற எல்லா விஷயங்களையும் மறந்து விட்டான்.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு."

என்று பொய்யா மொழியார் கூறியபடி குலசேகரன் செய்த நன்றியொன்றையே கருதியவனாய்ப் பாய்ந்தெழுந்து தன் கரங்களை நீட்டிக்கொண்டு குலசேகரன் கரங்களை யாவலோடு பற்ற முன்சென்றான். ஆனால் குலசேகரன் இரண்டொரு அடிகள் பின்னிடைந்து தன் கரங்களை மார்மேல் கட்டிக்கொண்டு அவன் காட்டவந்த நன்றியறிதலை யேற்க மறுத்தான். அதைக்கண்ட முருகப்பன் அவனுடைய ஒழுங்கீனமான நடக்கைக்கு மிக்க வியப்படைந்து, அவனுடைய அருவருப்பான பார்வையைக் கண்டு வெறுப்படைந்து தன்வரையில் நிதான மடைந்து நின்றான்.

குலசேகரன் அவன் உணர்ச்சியை யறிந்து "போதும். இதைப்பற்றி யதிகமாகப் பேசுவது அனாவசியம். நான் என்கடனைத் தீர்த்துவிட்டேன். இப்போது நாம் சமமாயிருக்கிறோம்" என்றான்.

முருகப்பன் "நீ எனக்கு இதில் சமமல்ல; மேலே. ஏனெனில் நான் ஒரு ஆபத்துமின்றி யுனக்குச்செய்த உதவிக்குப்பதிலாக நீ பிராணனுக்குத்துணிந்து எனக்கு உதவி செய்தாய்; இதுமட்டுமல்ல. எனக்கு உன் சுழல்துப்பாக்கியை யளித்திருக்கிறாய்" என்றான்.

குலசேகரன்:—எந்த விஷயத்திலும் அபாயத்தைக் கருதுகிறவர்கள் கோழைகளே. என் ஆயுள்முழுமையும் ஆபத்தே. என்மனைவி-அம்மனைவி என் கடல்பிரயாணங்கள் ஆயிரக்கணக்கானவற்றில் கூடவேவந்திருக்கிறாள். துப்பாக்கிகளோ என்னிடம் ஏராளமாயிருக்கின்றன. உனக்குப் பிரியமானபோது நம்மில் யார் அதை நன்றாக உபயோகிக்கிறார்கள் என்பதை யறியலாம்." என்றான்.

அவன் அம்மாதிரி கூறியதொனியில் ஒருவிதமான குறியிருந்தது. அது முருகப்பன் மனதில் உறுத்தியது. அவன் மனதில் ஒருவித வியப்புண்டாகியது.

அதையுணர்ந்த குலசேகரன் அவனருகில் வந்து "இதோ நான் கூறுவதைக்கேள். கௌரவமான பெரிய மனிதர்களுக்குள் ஒரு வழக்கமுண்டு. இருவரும் ஏககாலத்தில் ஒரே வேட்டையின்மேல் நாட்டம் வைக்கும் போது இருவர்க்கு மிடையில் அறுபதுகஜ மைதானமும் இரண்டு கைத்துப்பாக்கிகளும் இடையில் இருக்கும்படி செய்ய வேண்டும். அப்போது விவகாரம் சரிப்பட்டுப்போம்" என்றான்.

முருகப்பன்:—"நீ கூறுவது எனக்கு விளங்கவில்லை. இன்னதென விளங்கவில்லை" என்றான்.

குலசேகரன் ஒருவித நகைப்போடும் வெறுப்போடும் "ஆம் ஆம். உனக்கு அது விளங்குவது கஷ்டமே. விளங்காதுதான்" என்று கூறிக்கொண்டே சனக்கூட்டத்தில்

போய்க் கலந்துகொண்டான். அவன் நேரே மீனுள் அருகில் போய்ச் சேர்ந்ததையும், மீனுள் நடக்கை, அவன் செய்த உதாரகாரியத்திற்காக அவனுக்கு வந்தன மளித்ததுபோ லிருந்ததையும் முருகப்பன் கண்டான்.

புனிதவதிக்காக இல்லாவிட்டால் இவன் நம்மை அக் குடாவிலேயே மரிக்கும்படி விட்டுவிட் டிருப்பான். நாம் பிழைத்தோமா மரித்தோமா என்று கவனிப்பவர் ஒருவ ரையும் காணேம். இரண்டு துப்பாக்கிகளும் அறுபதுகஜ தூரமும். அதுதானு அவன் அர்த்தம்? அப்படியும் நேரிட லாகும்-ஆனுல் அவன் தன் உயிருக்குத்துணிந்து நம்மைக் காப்பாற்றிய இன்றையதினம் அது நடக்கலாகாது" என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

அவன் அவ்வாறு சிந்தித்துக்கொண்டே யிருக்கையில் வீட்டுக் காரியஸ்தனுகிய வயோதிகன் கிருஷ்ணப்பனிடம் "இந்த வாலிபர்கள் பரஸ்பரத் தீங்கு செய்துகொள்வார் கள். வேண்டு மென்றுல் பார். முன்பு இக்குலசேகரன் கடலில் முழுகி இறக்கப்போகும் தறுவாயில் முருகப்பன் இவனைக் காப்பாற்றினுன். அதன் பயனுக முருகப்பனுக்கு இந்த வசந்தமாளிகையிலிருந்த செல்வாக்கு முழுமையும் அடியோடு போய்விட்டது. முருகப்பன் இம்மாளிகைக்கு அன்னியனுய்விட்டான்; புதிதாகவந்த, குலகோத்திரம் முன் பின் தெரியாத குலசேகரன் இக் குடும்பத்திற்கு மிக்க நெருங்கியவனுய் விட்டான். இப்போது அக்குல சேகரன் கடலில் ஆபத்தில் சிக்கிய முருகப்பனைக் காப்பாற் றினுன். இதனுல் ஏதோ விபரீதம் நடக்குமென்பது நிச்ச யம். போகப்போக நீயே யதைப் பார்ப்பாய்" என்றுன்.

கிருஷ்ணப்பன்:—"சே சே! இவையெல்லாம் பாட்டிக் கதைகள்; கவிராயர்கள் கூறியிருக்கிறுர்கள்" என்றுன்.

காரியஸ்தன்:—"கவிராயர்கள் தவறிவிட்டிருக்கலாம். இவர்

களில் ஒருவரும் இத்தீவில் வசித்தவர்களல்ல. அப்படி அப் பழங்கதை யுண்மையானதாயின் இவர்களி லிருவரும் ஒருவருக்கொருவர் தீங்கிழைக்கமுயல்வார்கள். கடைசியில் முருகப்பனுக்குத்தான் கெடுதியாக முடியும்'' என்ருன்.

அம்மொழிகளைக் கேட்ட கிருஷ்ணப்பன் கோபமடைந்து, "நீ மற்றபேர்களைப் போல் ஐம்பதுபேருக்குச் சமமாகிய அந்த வாலிபனுகிய முருகப்பனுக்கு ஏன் கெடுதி கோருகிருய் ?'' என்ருன்.

காரியஸ்தனுகிய கிழவன்:—" இதோபார்; குலசேகரன் மற்றயாவரையும்போல் சாராயத்தைத் தாராளமாய்த் தைரியத்தோ டருந்துகிருன். இந்த முருகப்பனே தன் தந்தையைப்போல் வெறும் தண்ணீரைக் குடிக்கிருன்'' என்ருன்.

கிருஷ்ணப்பன் வெறுப்பான நகைப்போடு "பேஷ்! உன் ஆலோசனைக்குத் தக்கபடி நீ சரியாகவே கூறிஞய்'' என்று கூறிவிட்டு மற்றவர்களோடு கலந்துகொண்டு வசந்த மாளிகையை நோக்கி நடந்தான். யாவரும் திமிங்கிலத்தை வேட்டையாடியதையும் கடைசியில் அது தப்பித்துக் கொண்டு கடலுக்குப் பாய்ந்து போய்விட்டதைப்பற்றியும் பேசிக்கொண்டே சென்ருர்கள். யாவர் முகமும் ஒருவித வாட்டமேயடைந்திருந்தது. ஏனெனில் மிக்க இலாபகரமானபெரியவேட்டை கட்டாயம் கிடைக்குமென்றே இவர்கள் நம்பிச் சென்ருர்கள். கடைசியில் அத்திமிங்கிலம் இவர்களுடைய கஷ்டத்தையெல்லாம் வியர்த்தமாக்கிவிட்டு இவர்கள் தன் மேல் எறிந்த ஆயுதங்களையெல்லாம் கைப்பற்றியதுபோல் இழுத்துக்கொண்டு மறுபடி யிவர்கள் கண்களுக்கு அகப்படாதபடி ஆழ்ந்த கடலுக்குள் போய்விட்டது.

* * * *

ஒவ்வொரு சமயத்தில் நஷ்டம் நேர்ந்ததற்கு ஈடாக வேறுவழியில் அதிஷ்டவசத்தால் ஏதேனும் ஒருவகையான இலாபம் கிடைப்பதுண்டு. அவ்வாறே வசந்தமாளிகைக்கும், திமிங்கலவேட்டையில் நேர்ந்த நஷ்டத்திற்கு ஈடாக ஒருசம்பவம் நேர்ந்தது. அதாவது நமது ஹாக்கர் சுந்தரம் பிள்ளை அன்று மாலை யங்கு வந்தான். அவன் தான் ஒரு குதிரைமேலேறிக்கொண்டு மற்றொரு குதிரைமேல் அது சுமக்கமுடியாத சாமான்களை யேற்றிக்கொண்டு வந்தான்.

அவன் பார்வை மிக்க கம்பீரமாகவிருந்தது. அதோடு அவன் ஏதோ விசேஷமான பெரிய சமாசாரம் கொண்டு வந்ததாகக் கூறினன். ஆகையால் அவன் தட்சணம் உள்ளேயழைத்துச் செல்லப்பட்டான். அவன் சமையலறையில் கொண்டுபோய் உட்கார வைக்கப்பட்டதும் அவனுக்கு நல்ல உயர்தரமான ஆகாரம் திருப்தியாய்வட்டிக்கப் பட்டது; நல்ல சாராயவகைகளும் அளிக்கப்பட்டன. வீட்டெஜமானகிய தைரியநாதம் பிள்ளை யவனுக்கு நல்ல ஆகாரமளித்து அவன் திருப்தியாகப் புசித்து இளைப்பாறுமட்டும் அவனை யொருவரும் எவ்விதக் கேள்விகள் கேட்டும் தொந்தரை செய்யலாகாது என்று கட்டளை யிட்டிருந்தார்.

அப்படி யிருந்தும் ஹாக்கரே யாவரையும் நோக்கி "ஆ! நான் அருணன் தீவிலிருந்து நேற்றே யிங்குவந்திருப்பேன். ஆனல் வழியிலடித்த புயல்காற்று, அப்பா! அத்தகைய கடுமையாக விருந்தது" என்றான்.

அதைக் கேட்டவர்கள் "இங்குகொஞ்சங்கூடப் புயற்காற்று என்ற வாசனையே யில்லையே" என்றார்கள்.

ஹாக்கர் "ஓகோகோ! அப்படியாயின் நேற்று உங்கள் தீவில் அந்த நாகம்மாள் தங்கியிருக்கலாகும். அதனல் புயற்காற்று இங்கு தலை காட்டாமல் பயந்து அப்புறம்

சென்றிருக்கும்; அதிருக்கட்டும். ஆகா எத்தகைய நேர்த்தியானகப்பல்! எவ்வளவு இரம்மியமான சரக்குகள்! தெரியுமா?" என்றான்.

**தைரியநாதம் பிள்ளை:**—"சரி. நீ கொண்டு வந்திருக்கும் சரக்குகளை மிகக்குறைந்த விலைக்கு விற்றாலும் உனக்கு நல்ல இலாபம் கிடைக்குமென்று கருதுகிறேன். அது எம்மாதிரிக் கப்பல்" என்றார்.

**ஹாக்கர்:**—"அது எப்படிப்பட்ட கப்பலென்று சொல்ல என்னால் முடியாது. நான் அதன் கப்பித்தானை மட்டுமே கண்டு பேசினேன். ஆனால் அக்கப்பலில் எத்தனையோ பட்டுகள், சாதாரண நேர்த்தியான துணிகள், ஒயின் வகைகள், சாராயதினுசுகள், தின்பண்டங்கள், தேயிலை, சர்க்கரை, வெள்ளி பொன் நகைகள், பொற்கட்டிகள், இன்னும் என்னென்னவோ ஏராளமாக விருந்தன" என்றான்.

அவன் கூறியயாவும் கவனமாக மிக்க அக்கரையோடு கேட்டுக்கொண் டிருந்த குலசேகரன் அவனருகில் வந்து "அக்கப்பல் எம்மாதிரி யிருந்தது? கவனித்துக்கூறு" என்றான்.

**ஹாக்கர் சுந்தரம்:**—"அது ஒரு பலம்பொருந்திய தடித்த கப்பலே; அது ஒரு யுத்தக்கப்பல் போன்றது என்று பலர் கூறுகிறார்கள். அதில் இருபது பீரங்கிகளிருக்கின்றன; அவற்றைச்சுட அக்கப்பலின் பக்கங்களில் இருபது துவாரங்க ளிருக்கின்றன" என்றான்.

**குலசேகரன்:**—"அதன் கப்பித்தான் பெயர் என்னவென்று கூறுகிறார்கள்?" என்றான்.

**ஹாக்கர்:**—நான் அக்கப்பித்தானோடு பேசும்போ தெல்லாம் அவரைக் கப்பித்தா னென்று கூப்பிடுவதே யன்றி அவர்பெயர் என்னவென் றறிய விரும்புவ

தில்லை. ஏனெனில், காப்டென் குலசேகரம்! அனேகம் கப்பித்தான்கள் தங்கள் பெயரை வெளியிட விரும்புவதில்லை. நமக்கு அதைப்பற்றி யவசியமுமில்லை. அந்தக் காப்டென்பெயர் கந்தனுக விருந்தாலென்ன? கோவிந்தனுக விருந்தாலென்ன? அதைப் பற்றி நமக்கு அக்கரையில்லை. நாம் அவனிடம் செய்யும்பேரம் நமக்கு எவ்வளவுவரையில் இலாபகரமாக விருக்கிற தென்பதையே நாம் கருதவேண்டும். மற்றபடி அவரவர்கள் இரகசியம் அவரவர்க ளுடையது" என்றான்.

தைரிய நாதம்பிள்ளை "நமது சுந்தரம்பிள்ளை மிக்க சூக்கும புத்தியும் ஜாக்கிரதையு முடையவர். 'முட்டாள் பலகேள்விகளைக் கேட்பான். புத்திசாலி யாவற்றுக்கும் விடையளிக்க விரும்பமாட்டான்' என்ற பழமொழியை யிவர் நன்குணர்ந்தவர்" என்று கூறினர்.

ஹாக்கர்:—"எஜமானே! நான் இத்தகைய நாணயமான வர்த்தகர் அனேகரிடம் பேரம் செய்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவர்கள்பெயர் ஊர் முதலியவற்றைப்பற்றிக் கேட்பது மூடத்தனம் என்று எனக்குத்தெரியும். ஆனல் இந்தக் கப்பித்தான் ஒருதைரியமான சேனதிபதி யென்றுமட்டும் நான் திட்டமாய்க் கூறுவேன். அதுமட்டுமல்ல. மனிதரிடம் அன்போடு பேசுபவன். ஏனெனில் அவனுடைய ஆட்கள் ஒவ்வொருவரும் தைரியமான வீரர் போலவே உடையணிந் திருக்கிறார்கள். ஒவ்வொருவனும் உயர்தரப் பட்டு உட்சட்டை யணிந்திருக்கிறன். அவற்றோடு அவர்கள் அணிந்திருக்கும் மற்ற உடைகளோ, அப்பா! சொல்லத் தரமல்ல; எத்தகைய மேல்சட்டைகள்! எத்தகைய பொத்தான்கள்! கழுத்துப்பட்

டைகள்! வேறு எத்தகைய பட்டுடைகள்!" என்றான்.

குலசேகரன் "அட பைத்தியக்காரர்களே!" என்று தனக்குள் கூறிக்கொண்டு பிறகு வெளிப்படையாய், "அவர்கள் அடிக்கடி கரைக்குவந்து தங்கள் பட்டுச்சரக்குகளையெல்லாம் காட்டுகிறார்களோ?" என்றான்.

**ஹாக்கர்:**—ஒருகாலுமில்லை. அவர்கள் ஒருபோதும் கரையில் இறங்கக்கூடாதென்று கப்பித்தான் கண்டிப்பான உத்தரவு இட்டிருக்கிறான். ஒருபூனை அதன் நகங்களில்லா திருந்தாலும் இருக்கலாம். அக்கப்பித்தான் தன் உடைவாளும் இரண்டு கைத்துப்பாக்கிகளும் தன்னிடம் இல்லாமல் மட்டும் ஒருபோதும் இருக்கமாட்டான். ஒவ்வொருவரும் ஒரு சேனாதிபதியைக்கண்டால் போர்வீரர் பயப்படுவதுபோல் பயப்படுகிறார்கள்." என்றான்.

**குலசேகரன்:**—அப்படியாயின் அவன் ஒரு இராக்ஷதனாக அல்லது பேயாக விருக்கவேண்டும்.

**ஹாக்கர்:**—அவன் இராக்கதனோ, பேயோ, அல்லது இரண்டுமோ.; அப்பெயரை யவனுக்குச் சூட்டுவது நீயேயன்றி நானல்ல என்பதைமட்டு மறிந்துகொள்.

**தைரியநாதம்பிள்ளை:**—ஏன் காப்டென் குலசேகரம்! இக்கப்பல் நீ கூறிக்கொண் டிருந்த கப்பலாகவே யிருக்கலாகும்.

**குலசேகரன்:**—அப்படியாயின் அவர்கள் நல்ல அதிஷ்டமடைந்திருக்கவேண்டும். ஏனெனில் நான் அவர்களைவிட்டுப் பிரிந்தபோ திருந்ததைவிட அவர்கள் இப்போது நல்ல நிலைமையி லிருக்கிறார்கள்; சுந்தரம் பிள்ளை! அவர்கள் தம்தோழனை அல்லது கூட்டாளிக் கப்பலை யிழந்துவிட்டதாகக் கூறினார்களோ?

**சுந்தரம்பிள்ளை:**—உண்மையாகவே கூறினார்கள். அதாவது

தங்கள் கூட்டாளி இக்கடலில் முழுகிவிட்டதாகக் கூறினார்கள்.

குலசேகரன்:— "அக்கப்பலைப்பற்றி யுனக்குத் தெரிந்ததை நீ கூறினையோ?" என்று கேட்டான்.

ஹாக்கர்:—"எந்தமூடன் அதைப்பற்றிக் கூறுவான்? கப்பல் எப்படிப் போயிற்றென்று தெரிந்ததே மறு கேள்வி அதிலிருந்த சாமான்கள் எப்படிப் போயிற்றென்பதே. பிறகு ஆயுதம்தரித்த ஒருகப்பல் இங்கு வந்து இங்குள்ள ஏழைகளை யிம்சிக்க வழியுண்டாக்கவா சொல்கிறாய்; பேஷ்! கடைசியில் இங்குகடலலைகள் எறிந்தவை சில ஆபாசமான மக்கின கந்தல் துணிகளும் ஒட்டையுடைசலுமே" என்றான்.

தைரியநாதம்பிள்ளை:—"ஆம், ஆம். இப்போது உன் மூட்டையிலிருக்கும் சரக்குகளும் இவைபோன்றவையும் நீங்கலாக மீதியனைத்தும் ஆபாசக் கந்தல்களே." என்றான்.

இதைக் கேட்டதே யாவரும் கலீலென்று நகைத்தார்கள். தைரியநாதனும் தன்னாலுண்டான நகைப்பில் தானும் சேர்ந்து கலகலவென்று நகைத்தான். ஆனால் உடனே தன் நகைப்பை யடக்கிக் கொண்டு, "ஒ நண்பர்களே! இதைப்பற்றி நீங்கள் நகைக்கலாம். ஆயினும் இது இத்தீவிற்கு அவமானத்தையும் சாபத்தையும் உண்டாக்கும் விஷயமாக்கும். கப்பற்சேத மடைவோர்களுடைய உரிமையையும் நியாயத்தையும் நாம் உணர்ந்து நடக்காதவரையில், இதுகாறும் நடப்பதுபோல் நம்மிலும் பலசாலிகளால் நாம் கசக்கப்பட வேண்டியது நியாயமே யாகும்" என்றான்.

## 25-வது அத்தியாயம்.

தைரியநாதம் பிள்ளை கூறிய கண்டன மொழியைக் கேட்டதே யங்கிருந்த அனைவரும் தலைநாணினார்கள். அங்கிருந்தவர்களில் சற்று மேலான அந்தஸ்திலிருந்தவர்களுக்குக்கூட அவ்வார்த்தைகள் மனதில் உறுத்தின. ஏனெனில், சேதமடைந்த கப்பலிலிருந்து அகப்பட்ட பொருள்களைத் தாங்கள் கைப்பற்றிக் கொள்ள ஆவலுடையவர்களாக விருந்ததையும், தங்களிடமிருக்கும் ஆட்கள், சேதமடைந்த கப்பலைக் கொள்ளை யடிப்பதைத் தடுக்கத் தாங்கள் சிரத்தை யெடுத்துக்கொள்ள வில்லையென்பதையும் அவர்கள் மனச்சாட்சியே யவர்களுக்கு வற்புறுத்துகிறது.

ஆனால் குலசேகரன் மட்டும் சந்தோஷமும் விளையாட்டுமாகவே, "அக்கப்பலின் ஆட்கள் என் நண்பர்களாக விருந்தால் அவர்கள் ஊர்ச்சனங்களைத் தொந்தரவு செய்யாதபடி தடுப்பேனென்று உறுதியாய்க் கூறுவேன். கப்பலே போனபின் அதிலிருந்த சாமான்களை நமது சுந்தரம்பிள்ளை யெடுத்துக் கொண்டா லென்ன, அவைகடலில் முழுகி யழிந்தாலென்ன? ஆகையால் சுந்தரம்பிள்ளை! உமது மூட்டையை யவிழும். இங்கிருக்கும் சீமாட்டிகளுக்கு வேண்டிய சரக்குகள் இதிலிருக்கும்" என்றான்.

அவர்கள் அவ்வாறு பேசிக்கொண் டிருக்கையில் யாவும் கேட்டுக் கொண்டிருந்த புனிதம் குசுகுசு வென்று தன் தமக்கையிடம் "அக்கப்பல் அவன் கூறிய கப்பலாயிராது. அப்படி யிருந்தால் அதைப்பற்றி யறிந்ததே அவன் மிக்க சந்தோஷ மடைந்திருப்பான்." என்றாள். மீனாள்:—"அது இவன்கூறிய கப்பலாகவே யிருக்கவேண்

டும். அதைப்பற்றிக் கூறியபோது அவன் கண்களில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று.

**புனிதம்:**—அவன் கண்ணின் பிரகாசத்தைக்கண்டே யவன் மனோபாவத்தை யறிய முடியாது.

**மீனாள்:**—"ஆயினும் ஒரு நண்பனுடைய எண்ணங்களைப் பற்றித் தவறான அபிப்பிராயம் கொள்ளாதே. நீ யப்படித்தவறி விட்டால் அத்தப்பிதம் உன்னுடையதல்ல" என்றாள்.

இவர்கள் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் ஹாக்கர் சுந்தரம்பிள்ளை தன் மூட்டையை யவிழ்த்துக் கொண்டிருந்தான். அம்மூட்டை தோலாலும் சீலையாலும் பலமாய்ச் சுற்றப்பட்டுக் கயிற்றால் கட்டப்பட் டிருந்தது. அங்கிருந்தவர்கள் அவன் கூறிய கப்பலைப்பற்றி யவனைப் பல விதமான கேள்விகள் கேட்டுக்கொண் டிருந்தபடியால் அவன் மூட்டையை யவிழ்க்கும் வேலை ஆலசியப்படுத்தப் பட்டது.

தைரியநாதம்பிள்ளை சுந்தரம்பிள்ளையைநோக்கி "அக்கப்பலிலிருந்த உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி கரைக்குவந்தார்களா? அவ்வூரார் அவர்களை யெப்படி நடத்தினார்கள்?" என்று வினவினர்.

**சுந்தரம்பிள்ளை:**—"ஏன்? அவர்கள் மிக்க அன்போடும் உபசாரத்தோடுமே நடத்தப்பட்டார்கள். கப்பித்தானும் அவன் ஆட்களில் சிலரும் அங்குள்ள நாடகசாலை கேளிக்கைகள் நடக்குமிடம் இவற்றிற்குச் சென்றிருந்தார்கள். எங்கும் அவர்கள் மிக்க நேர்த்தியாகவே நடத்தப் பட்டார்கள். துறைமுகச் சுங்கம், அரசர் வரி என்ற வார்த்தைகள் பிரஸ்தாபிக்கப் பட்டன. அங்குள்ள பெரிய மனிதர்களில் கௌரவ நியாயாதிபதியென்று கூறப்பட்ட இரண்டொருவர் கப்பித்தா

னிடம் அவ்விஷயத்தைப்பற்றிப் பேசினர்கள். ஆனல் கப்பித்தான் அவர்களைத் திருப்தி செய்யவில்லை யென்று தெரிகிறது. அதன்பிறகு கப்பித்தான் சற்று வேறுப்பாகவே நடத்தப்பட்டிருக்கலாம். அக்கப்பல் அத்துறையி லிருந்து வேறிடத்திற்குக் கொண்டு போகப்பட வேண்டுமென்று பேசிக் கொண்டார்கள். ஆயினும் வசந்தகாலக் கேளிக்கைகள் முடியுமட்டும் குறுக்குத் துறையில் தான் இருக்குமென்று நான் எண்ணுகிறேன்" என்றான்.

தைரியநாதம்பிள்ளை "அந்த ஆரல்தீவிலுள்ள பெரிய மனிதர்கள் தங்கள் கழுத்திலிருக்கும் சங்கிலியைத் தாங்களே நெருக்கிக் கொள்கின்ற புத்திசாலிகள். இப்போது மலைநாட்டுத் துரைத்தனத்திற்கு நாம் செலுத்தும் நிலவரி வீட்டுவரி காட்டுவரி முதலிய பல வரிகளெல்லாம் போதாமல் அரசன்வரி மந்திரிவரி இன்னும் எத்தனை வரிகள் கொடுக்க வேண்டும்! ஒவ்வொரு கௌரவமான மனிதனும் அதற்கு மறுக்கவேண்டியதே. நான் எப்போதும் மறுத்துக்கொண்டேதானிருக்கிறேன் இன்னும் என் ஆயுள் முழுமையும் அதைக்கொடுக்க மறுத்துக் கொண்டுதா னிருப்பேன்" என்று தாம்வைத்ததே சட்டம்போல் உரத்துக் கூறினர்.

அம்மொழிகளைக் கேட்டதே அங்கிருந்தவர்கள் "ஹா! பேஷ்பேஷ்!" என்று கரகோஷம்செய்தார்கள். ஏனெனில் தைரியநாதம்பிள்ளை அரசனுக்குச்சேரவேண்டிய வரிகளைக் கொடுக்கலாகாது என்று கூறியதால் அங்கிருந்தவர்களில் பலருக்கு அவர்மேல் அதிக சந்தோஷ முண்டாயிற்று. அத்தீவார் இயற்கையிலேயே முரடர்கள். அவர்கள் வடநாட்டிலிருந்து அங்குவந்து குடியேறிக் கொஞ்சகாலம் சுயேச்சையாய் ஒரு ஆளுகையு மின்றி அத்தீவின் ஓரத்தில்

புயற்காற்றுல் ஒதுக்கப்படும் கப்பல்களை யெல்லாம் கொள்ளையடித்துக்கொண் டிருந்தவர்கள். பிறகு மலைநாட்டரசன் அத்தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டான். ஆகையால் அரசனுக்கு நாம் வரிகளை யளிக்க வேண்டியது நியாயமென்றும், அளிக்கமறுப்பது அநீதமாகியகுற்றமென்றும் அவர்களுக்கு விளங்குவது கஷ்டமாகவே யிருந்தது.

தன் தந்தை கூறியதைக் கேட்ட மீனுள் தன் சகோதரியிடம் தாழ்ந்த குரலாய், குலசேகரனுக்குக் கேட்காவண்ணம் "இந்த ஆரல் தீவார்கள் கோழைத்தனத்தால், மலைநாட்டு இராஜாங்கத்தின் ஆளுகையி லிருந்து விலகிக்கொள்ளத் தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை வீணேபோக்கடித்துக் கொண்டார்கள். அவர்கள் தங்களைச் செயித்தவர்களிடம் சம்பந்தம் செய்து நெருங்கிக் கலந்துகொண்டதால் தங்கள் வடநாட்டு இயற்கையாகிய வீரத்தன்மையை யடியோடு மடியச் செய்தார்கள்" என்றுள்.

காப்டென் குலசேகரன் மீனுள் கூறியதைக் கேட்காவிட்டாலும் விவசாயியாகிய எல்லப்பப் பிள்ளையின் செவிகளில் அவள் வார்த்தைகள் வீழ்ந்தன. கலகத்தையும் தீங்கையும் உண்டாக்கும் அத்தகைய மொழிகளைக் கேட்டதும் அவன்மனம் கொதிப்பெடுத்தது. அதன்மேல் அவன் மீனுளைநோக்கி, "பேஷ்! கிழக்கோழி கத்துகிறபடி தானே அதன் குஞ்சும் கத்தும். ஆயினும் தந்தை அரசனுடைய வரியைக் கொடுக்க வேண்டாமென, மகள் அந்த அரசன் செங்கோலையே யொழித்துவிட வேண்டு மென்னும் நாடு மிக்க நேர்த்தியான நாடாகவே யிருக்கவேண்டும். என்தீர்மானமென்ன வெனில், இதெல்லாம் கடைசியில் கம்பத்திலும் கயிற்றிலுமாக முடியும்" என்றுன்.

எல்லப்பன் கூறியதன் அர்த்தம் என்னவெனில், 'நீங்கள் அரசனுக்கு விரோதமாகக் கிளம்புகிறவரையில் கடை

சியில் இராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்கில் போடப்படுவீர்கள்' என்பதே" என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட தைரியநாதம்பிள்ளை "மரங்கள் இந்நாட்டிலில்லை; கயிறுகளோ நமக்கே போதுமானவை கிடைக்கவில்லை" என்றார்.

காப்டென் குலசேகரன் நகைத்துக்கொண்டே "அய்யா எல்லப்பப்பிள்ளையே! இந்த வாலிபச் சீமாட்டி கூறுவதை யார் மறுத்துக் கூறுகிறார்களோ அவர்கள் தங்கள் நாக்கையும் செவிகளையும் மிக்க ஜாக்கிரதையாய்ப் பார்த்து வைத்துக்கொள்ள வேண்டும்." என்றான்.

எல்லப்பப்பிள்ளை:—ஓகோ! ஆம், ஆம்; உள்ளதைக் கூறப்போனால் நொள்ளைக் கண்ணனுக்கு நோப்பாளமேயென்பதுசரிதான். வாலிபர்கள், யௌவன அழகான கன்னிகைகளைக் கண்டு அவர்கள் காற்றில் சிக்கியதே ஒருவைக்கோல் தாளையும் வாளென மதித்துப் போருக்குச் செல்லக்கூடிய நாட்டில் என்ன ஒழுங்கைத்தான் எதிர் பார்க்கலாகும்! பேஷ் பேஷ்" என்றான்.

குலசேகரன்:—அய்யா! என் நடக்கையில் ஒழுங்கைக் கவனித்துச் சோதிக்க முயல்வது அபாயமாக முடியும்.

ஹாக்கர்:—ஆம். ஆம். அதோடு கஷ்டமாகவுமே முடியும். ஆயினும் காப்டென் குலசேகரம்! நான் கூறிய அபிப்பிராயத்தால் உனக்கு ஏதேனும் கெடுதியுண்டாகுமென்று நீ கருதவேண்டாம். ஏனெனில் என் விவகாரமனைத்தும் கரையையும் கரையிலுள்ளவர்களையும் பற்றியதேயன்றிக் கடலிலுள்ளவர்களைப் பற்றியதல்ல.

குல:—ஓகோ! அப்படியாயின் ஓ! மண்கொத்தி வயோதிகரே! நாம் இருவரும் நண்பர்களாகவே யிருக்கலாம்.

எல்:—ஓ! பேஷ்! மண்கொத்தியா? ஆம் ஜலம் கொத்தி

யென்று கூடக்கூறலாம். ஆனல் இந்த வாக்கியத்தை நீ எந்த யாத்திரையிற் கற்றுக்கொண்டாயோ அது தான் எனக்குத் தெரியவில்லை.

குல:—“நான் செய்த யாத்திரைகள் அனந்தம்; அவற்றைப்பற்றி யக்கரையில்லை” என்று கூறிவிட்டு ஹாக்கர் சுந்தரம்பிள்ளையை நோக்கி,

“ஏன் சுந்தரம்பிள்ளை ! உமது மூட்டை யவிழ்த்தாய் விட்டதல்லவா? வாருங்கள் யாவரும் அச்சரக்குகளைப் பார்க்கப்போவோம். அவற்றில் நாம் பிரியப்படத்தக்கவையிருக்குமென்றே நம்புகிறேன்” என்ருன்.

ஹாக்கரோ தன் சரக்குகளை விற்பனைக்குக் காட்டுவதில் மிக்க சாமார்த்தியமான புத்தியுடையவன். ஆகையால் அவன் தன்னிடமிருக்கும் சரக்குகளில் முதல்தரமானவற்றை யெடுத்து வெளியில் பரப்பினன். அவற்றில் உயர்தரமான பட்டில் சரிகையில் பலவிதமான சித்திர வேலை செய்யப்பட்ட துணிகளும், ஆடவர் அணியத்தக்க விலையுயர்ந்த நாணயமான பட்டுச் சேலைகளும், பட்டுப்போன்ற நார்த்துணிகளும், பலவித உயர் தரமான உட்சட்டைகளும், மேல் போர்வைகளும், சால்வைகளும், பட்டுக் குட்டைகளும், இன்னும் பலவிதச் சாமான்களுமிருந்தன.

ஹாக்கர் சுந்தரம்பிள்ளை மிக்க பெருமையோடு அவற்றை யெடுத்துப் பரப்பிக்காட்டினன். அச்சரக்குகள் அங்கிருந்தவர்கள் அனைவரும் வியப்படைந்து பிரமிக்கக் கூடியவைகளாகவேயிருந்தன. அங்கிருந்த ஆடவரும் மாதரும் அவற்றைக்கண்டு வியப்படைந்து கொண்டிருக்கையில் எல்லப்பப்பிள்ளையின் தங்கையாகிய பாப்பம்மாள் மட்டும் அவற்றைக் கண்டதும்,

“அய்யோ கடவுளே! இத்தகைய வெட்டித்தனமான செலவையுண்டாக்கும் வஸ்துக்களைக் கண்ணுல் பார்ப்பதே

பெரும்பாதகம்; அதினும் இத்தகைய குடியை முழுகடிக்கும் சாமான்களின் விலையைக் கேட்பது பெருங் கொலைப் பாதகமான செயலாகும். அடடா! உலகில் இப்படியும் நடக்குமோ!" என்றாள்.

ஆனால் அங்குள்ளவர்களில் மற்றையோர் வேறுவிதமாக எண்ணினார்கள். வந்திருக்கும் சாமான்கள் மிக்க நாணயமானவை. விலையுயர்ந்தவை. அவர்கள் ஹாக்கரை விலை கேட்டபோது அவன் "நான் கூறிய விலை உங்களுக்கு இதை நான் இனமாய் அளிப்பதற்குப் பதில் நீங்கள் விலைக்கு வாங்கியதாகக் கருதத்தக்க விலையே" யென்றான்.

அவன் அவ்வாறு கூறியது அவ்வளவில்லாவிடினும், ஏறக்குறைய அவன் விற்கும் விலை மிகக் குறைவாகவே யிருந்தது. அதனாலேயே அவன் அச்சாமான்களை மிகக் குறைவான விலைக்கு வாங்கினானென்று யாரும் அறிந்து கொள்ளலாம். இதனால் அங்கிருந்தவர்களெல்லாம் தங்களுக்கு அச்சமயம் அச்சாமான்கள் வேண்டியிராதிருந்தாலும், மிக்க குறைந்த விலைக்கு வருகிறபடியால் வாங்கி வைத்துக்கொள்ளலாம் என்பதற்காகவே வாங்கத்தொடங்கினார்கள்.

அங்கிருந்த பெண்பாலாரனைவரும் ஏராளமான உடைகளை வாங்கினார்கள். அத்தீவின் தலைவனாகிய தைரியநாதம் பிள்ளையும் அனேகம் சாமான்கள் வாங்கினார். ஆனால் அனைவரைக்காட்டிலும், குலசேகரன் மிக்க நாணயமான சாமான்களை, அதுவும் வாலிபக் கன்னிகைகளுக்கு உதவக் கூடிய சாமான்களை யதிகமாக வாங்கி யங்குவந்திருந்த கன்னிகைகளுக்குத் தாராளமாக அவற்றைப் பரிசாக அளித்தான்.

அப்பரிசுகளில் பெரும்பாலானவை, மிக்க விலையுயர்ந்தவையெல்லாம் மீனாளுக்களிக்கப்பட்டதென்று நாம் கூற

வேண்டியதில்லை. தைரியநாதம் பிள்ளை காப்டனை நோக்கி, "இந்த வாலிப மாதர்களெல்லாம் நீயளித்த பரிசுகளைக் கியாபகார்த்தமாய் வைத்திருக்கவேண்டுமென்று கருது கிறேன். மேலும் இந்த உதாரச் செயல்களால் நீ எங்களை விட்டுச் சீக்கிரம் பிரிந்துபோகிருய் என்பது தெரிகிறது" என்ருர்.

அவர்மொழிகளைக் கேட்டதே குலசேகரன் ஒருவித மான கலவரமடைந்தான். உண்மை யென்னவெனில் அவன் சீக்கிரமாக அந்த விடத்தை விட்டுப் போய்விடக் கருதியவனல்ல. அவனுள்ளத்தில் ஒருவிதமான நயவஞ்ச கக் கள்ள வெண்ணமிருக்கிறது. ஆனுல் தன் செய்கை யால், மற்றவர்கள் தான் சீக்கிரத்தில் அவர்களை விட்டுப் பிரிந்து விடுதலை உணர்த்து மென்பது அப்போது தான் அவன் புத்தியிற்பட்டது. ஆகையால் அவன் ஒரு வித மாகச் சமாளித்துக் கொண்டு "குறுக்குத் துறையில் வந் திருக்கும் கப்பல் நான் கூறிய கப்பல்தான் என்பது எனக் குத் தெரியாது. எதற்கும் நான் அங்கு சென்று பார்க்க வேண்டும். அப்படி யது நான் கூறிய கப்பலாக விருந்தால் நான் உடனே திரும்பிவந்து உங்களிடம் விடைபெற்றுச் செல்வேன்" என்ருன்.

தைரியநாதம் பிள்ளை :—அப்படியாயின் நானே யுன்னை யங்கு அழைத்துச்செல்வேன். இந்த வசந்தகாலக் கொண்டாட்டத்தின்போது நான் அங்கு செல்ல வேண்டும். ஏனெனில் நான் அங்குள்ள வர்த்தகர்கள் சிலருக்குப் பதனிட்ட மச்சம் விற்றிருக்கிறேன். அப் பணத்தை வசூல்செய்ய அங்கு நான் செல்லவேண் டும். அப்படிச் செல்லும்போது மீனுளையும் புனித வதியையும் அழைத்துச் செல்வதாக வாக்களித்திருக் கிறேன். அதன்படியே யிப்போது அவர்களை அழைத்

துச் செல்லப் போகிறேன். நாங்கள் எங்கள் சொந்தப்படகில் செல்லப் போகிறோம். நீ வருவதாயின் எங்கள்கூட வரலாம்" என்றார்.

காப்டென் குலசேகரன் அவர் ஏற்பாட்டை யொப்புக்கொள்ள மிகச் சந்தோஷ முடையவனாக விருந்தான். மீனாளும் அவள் சகோதரியும் கூடவருவதைக் கேட்டதே யவனுக்கு மிக்க சந்தோஷத்தை யளித்துவிட்டது. ஆகையால் பின்னும் சந்தோஷத்தோடு ஹாக்கரின் சாமான்களில் அதிகமாக வாங்கினான்.

தைரியநாதம்பிள்ளை மேலும் "இன்னொரு விஷயம்; நீ கூறிய கப்பலில் எனக்குப் பிரியமான சாமான்களும் ஏதேனு மிருக்கலாம்." என்றார்.

குலசேகரன் ஏராளமாய்த் தன் பணத்தைச் செலவிடுவதைக்கண்ட பாப்பம்மாள் மெதுவாய்த் தன் தமையனிடம் "இவன் இப்படித் தன் பணத்தைச் செலவிடுவதை நோக்கினால், இவன் கப்பல்கள் எத்தனை வடகடலில் முழுகி விடினும் இவன் சட்டைசெய்யான்போ லிருக்கிறதே" என்றாள்.

குலசேகரன் மெதுவாக அவள் கூறியதைக் கேட்டான். அவனுடைய எண்ணம் எல்லாரும் தன்னை மதித்துப் புகழவேண்டு மென்பதே. ஆகையால் அவன் உடனே ஹாக்கரிட மிருந்த ஒரு உயர்தர விலையுள்ள சால்வையை வாங்கிப் பாப்பம்மாளிடம் சென்று "அம்மா! இச்சால்வை உனக்கு மிகத் தகுதி யுடையது" என்று கூறித் தன் கரத்தால் அதை யவள்மேல் போர்த்தினான். அங்கிருந்த அனைவரும் அதையொரு வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

காப்டென் குலசேகரன் அக்காரியத்தைச் செய்துகொண்டிருக்கையில் முருகப்பன் ஒரு நாணயமான உடையை விலைக்குவாங்கினான். அதைப் புனிதவதிக்குக் கொடுக்க

வேண்டுமென்பது அவன் எண்ணம். அதேசமயம் பைரவி கிருஷ்ணப்பன் ஒரு வெள்ளிப் பொடிடப்பியை வாங்கப் பிரியப்பட்டு ஹாக்கரிடம் அதன் விலையைப்பற்றிக் கேட்டான். விலை ஒருவாறு சரிப்பட்டபின் கிருஷ்ணப்பிள்ளை விலையை இரண்டு தவணைகளில் கொடுப்பதாகக் கூறினன்; ஏனெனில் வயோதிகனிடம் ரொக்கப்பணமில்லை. ஆனால் ஹாக்கரோ "அய்யா! நான் என்சரக்குகளை மிகக்குறைந்த இலாபத்திற்கு விற்கிறபடியால் இதில் கடன்கொடுக்க என்னால் முடியாது" என்றான்.

முருகப்பன் அவர்கள் சம்பாஷணை முழுமையும் ஜாடையாகக் கேட்டுக்கொண் டிருந்ததால் தட்டென்று எழுந்துசென்று ஹாக்கரைநோக்கி "அய்யா! நான் இந்த வெள்ளிப் பொடிடப்பியை முன்னமே எனக்காகப் பொறுக்கி யெடுத்து வைத்திருக்கிறேன். ஆகையால் நீர் இதை யாருக்கு மளிக்கலாகாது. மேலும் இதை நான் ஒரு பெரியவருக்குப் பரிசாயளிக்கத் தீர்மானித் திருக்கிறேன்" என்றான்.

ஹாக்கர் "இதன் கிரையம்?" என்றதே முருகப்பன் பணத்தை யெடுத்து மேஜைமேல் வைத்துவிட்டான். கிருஷ்ணப்பிள்ளை முருகப்பனை நோக்கி "வாலிபனே! நீ எனக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டாம். உனக்கு இத்தகைய கஷ்டமளிக்க எனக்குப் பிரியமில்லை" என்றான்.

ஹாக்கர் "ஹா! உங்கள் சச்சரவை நீங்கள் எவ்வாறாகவேனும் முடிவுசெய்து கொள்ளுங்கள்" என்றுகூறிப் பணத்தை யெடுத்துப் பையிற் போட்டுக்கொண்டு தன் மற்ற காரியங்களைக் கவனிக்கச் சென்றான்.

மறுசமிடம் இதுகாறும் பாப்பம்மாளைக் கவனித்துக் கொண்டிருந்த காப்டென் குலசேகரன் தட்டென்றெழுந்து

ஹாக்கர் சுந்தரம்பிள்ளையை நோக்கி "என்ன அய்யா? எனக்கு விற்றுவிட்ட பொருளை நீ எப்படித் துணிகரமாய் மறுபடி யின்னொருவர்க்கு விற்பாய்?" என்று கோபத்தோடு கேட்டான்.

இதைக்கண்ட அனைவரும் மிக்க வியப்படைந்து நோக்கினார்கள். ஹாக்கரோ நம்மிடம் அதிகமாகப் பேரம்செய்தவனோடு எப்படி மனத்தாபம் உண்டாக்கிக் கொள்வதென்று "அய்யா! நான் ஒன்றும் குற்றமாய்க் கருதிச் செய்யவில்லை" என்று பக்குவமாகக் கூறினன்.

குலசேசரன் "என்ன அய்யா! குற்றமாகக்கருதவில்லையென்கிறாய்? என்சொத்தை நீ யெப்படி யின்னொருவருக்கு விற்கலாம்? அந்த வாலிபர் பணத்தை யவரிடம் கொடுத்துவிடு. இனிவர்த்தகன் ரீதியாய் நாணயத்தோடு வேலை செய்" என்று கூறிக்கொண்டே அந்த டப்பியையெடுக்கக் கரத்தை நீட்டினன். ஹாக்கர் கலவரமடைந்து முருகப்பனுக்குப் பணத்தைக் கொடுக்க வெண்ணித் தன் பணப்பையில் கரத்தைப் போட்டான். ஆனல் முருகப்பன் அப்படி விட்டுவிட நினைக்கவில்லை. அவன் "ஓ சுந்தரம்பிள்ளை! இச்சாமான்கள் விற்கப்பட்டன - வாங்கப்பட்டன. இவை நீயே கூறிய வார்த்தைகள். அதுவும் பைரவிகிருஷ்ணப்பிள்ளையின் முன்னிலையில் கூறியிருக்கிறாய்; இவையென் சொத்துக்களாகி விட்டன" என்றான்.

காப்டேன் குலசேகரன்:—இவை யுன் சொத்துக்களா?

இவை யென்னுடையவை. நான் முன்னமே சுந்தரம் பிள்ளையிடம் இவற்றைப்பற்றிப் பேசியிருக்கிறேன்" என்றான்.

சுந்தரம்பிள்ளை கோமுட்டி சாட்சி என்ற பழமொழி போல் "நான்—நான்-நன்றாகக் கேட்கவில்லை." என்றான்.

## 26—வது அத்தியாயம்.

அவர்கள் சம்பாஷணையால் சச்சரவு நேரிடும்போ லிருப்பதை யறிந்த தைரியநாதம்பிள்ளை "போதும் போதும்; அற்பசங்கதியைப் பற்றிச் சச்சரவு வேண்டாம்; வாருங்கள் வாருங்கள்; மாதர்கள் நடனசாலையில் உங்களை யெதிர்பார்க்கிறார்கள். நாமெல்லாம் சந்தோஷமான மனதோடு அங்கு செல்லவேண்டும். இந்தச் சாமான்கள் இரவிற்கு சுந்தரம்பிள்ளை யிடமே இருக்கட்டும். காலையில் நான் அது யாருக்குச் சேரவேண்டு மென்பதைப்பற்றி முடிவுசெய்கிறேன்." என்றார்.

அந்த விடத்தில் தைரியநாதம்பிள்ளை யிட்டதே சட்டம். ஒருவரும் அதற்கு மறுத்துக்கூற முடியாது. ஆகையால் அதையுணர்ந்த வாலிபர்களாகிய முருகப்பனும் காப்டென் குலசேகரனும் ஒருவரை யொருவர் வெறுப்போடு நோக்கிக் கொண்டே அந்தவிடத்தை விட்டுச்சென்றார்கள். எப்போதும் முதல்நாள் கேளிக்கையிலிருந்த உற்சாகம் மறுநாளிருப்பதில்லை. ஏனெனில் முதல்நாள் கேளிக்கையால் அவர்கள் தேக அவயவங்களும் மன உற்சாகமும் சோர்வடைந் திருக்கிருக்கின்றன. ஆகையால் மறுநாள் வசந்த மாளிகையில் நடந்த கேளிக்கை முன்னாளினும் உற்சாகக் குறை வுடையதாகவே யிருந்தது. இரவு மணி சரியாகப் பனிரண்டு ஆகும்போதே தைரியநாதம்பிள்ளை "யாவரும் சயனத்திற்குச் செல்லலாம்" என்று கூறிவிட்டார்.

இச்சம்பவம் நடந்த சற்று நேரத்திற்கெல்லாம் கிருஷ்ணப்பன் முருகப்பனிடம் வந்து அவனைச் சற்று எட்ட அழைத்துச் சென்று குலசேகரனிடமிருந்து ஒரு சங்கதி கொண்டு வந்திருக்கிறேன் என்று கூறினான்.

அதைக்கேட்டதே முருகப்பன் மனத் துடிப்படைந்து "என்ன! ஒரு சங்கதியா? ஒரு சண்டையோ?" என்றான்.

கிருஷ்:—சண்டையா? இத்தீவில் நாங்கள் ஒருபோதும் சண்டையைப்பற்றிப் பேசுவதேயில்லை. அதிலும் நான் உன்னிடமா அச்சங்கதியைக்கொண்டுவருவேன். ஒருபோதும் இல்லை. நான் இத்தகைய முட்டாள் தனமான சண்டைகளில் பிரவேசிக்கும் அத்தகைய மூடனல்ல. குலசேகரன் அந்தச் சாமான்களின் மேல் மனம் வைத்திருக்கிறான்" என்றான்.

முரு:—"அவன் அச்சாமான்களை படைய முடியாதென்று சத்தியம் செய்கிறேன்" என்றான்.

கிருஷ்:—இல்லையில்லை. நான் கூறுவதைக்கேள். அச் சாமான்களின் மேலிருந்த குறிகளால் அவை முன்பு தன் சாமான்களாக விருந்தனவேயென்று அவன் தெரிந்து கொண்டான். ஆகையால் நீ அப்பொருளை யென்னிடமளித்து விட்டால் நான் அவன் சொத்தை யவனிட மளித்துவிடுவேன்" என்றான்.

முரு:—"புனிதவதியும் அப்படியே செய்யலாகும்" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டே கெட்டியாய் "என் நண்பரே! நான் அதைப்பற்றி நன்றாகச் சிந்தித் தேன். குலசேகரன் தான் அவ்வளவு பிரமாதமாகக் கருதும் அந்த விளையாட்டுச் சாமான்களை யவனே யெடுத்துக்கொள்ளட்டும்; ஆனால் ஒரு நிபந்தனையின் மேல் தான் அப்படிச்செய்யலாம்" என்றான்.

கிருஷ்:—"அய்யோ! அப்படியல்ல; நீ யுன் நிபந்தனையால் யாவற்றையும் கெடுத்து விடுவாய். ஏனெனில் முன் னோர் கூறியபடி..." என்பதற்குள் முருகப்பன் "சற்று பொறு. நான் கூறும் நிபந்தனையாவது, அவன் எனக்கு ஒரு துப்பாக்கியைப் பரிசாக அளித்திருக்

கிருன். இச்சாமனை அதற்கு ஈடாக அவன் ஏற்றுக் கொள்ளவேண்டும். இதுவே நிபந்தனை. அப்போது ஒருவருக்கொருவர் செய்ய வேண்டியதாக இருந்த கடனம நீங்கிப்போகிறது" என்ருன்.

கிருஷ்:—"சரி! நீ யச்சாமான்களைக் குலசேகரனுக்கு அளிக்கும்படி சுந்தரம்பிள்ளைக்குக் கூறிவிடு; நான் குலசேகரனைக்கண்டு உன் நிபந்தனையைப்பற்றிக் கூறுகிறேன்; இன்றேல் சுந்தரம் பிள்ளை இருவரிடமும் பணம் பெற்றுக்கொள்ளலாம். குலசேகரன் இவற்றை வாங்கிக்கொள்ள மிக்க ஆவல் கொண்டிருக்கிருன்" என்று மொழிந்தான்.

கிருஷ்ணப்பிள்ளை யவ்வாறு கூறிவிட்டுக் குலசேகரன் இருக்குமிடத்தை நோக்கிச்சென்ருன். முருகப்பன் ஹாக்கர் சுந்தரம்பிள்ளையைக் கண்டதும் "சந்தர்ப்பம் நேரும் போது அச்சாமான்களைக் குலசேகரனிட மளித்துவிடு" என்று கூறினன்.

ஹாக்கர் முருகப்பன் மொழிகளைக் கேட்டதே "முருகப்பா! நீ மிக்க புத்தி சூக்குமமும், சமயோசித புத்தியுமுடையவன் என்று நான் மிக்க சந்தோஷமடைகிறேன். சாந்தமானபதில் எப்போதும் கோபத்தையடக்கிவிடுகிறது. நான், என் வரையில் எந்தச் சாதாரண விஷயத்திலும் உனக்குத் திருப்தியுண்டாகுமாறே நடந்து கொள்வேன். ஏனெனில் இச்சமயம் தைரியநாதம் பிள்ளைக்கும் இக்குலசேகரனுக்கும் இடையிலுள்ள மனிதர் இருதலைக்கொள்ளியின் மத்தியிலிருப்பவரே யாவர்; இந்தத் தைரியநாதம்பிள்ளை கடைசியில் உன் பட்சமே சேர்ந்து விடுவார். ஏனெனில் அவர் எப்போதும் நீதியையே கருதுபவர்" என்ருன்.

அவன் மொழிகளைக் கேட்ட முருகப்பனுக்குக்

கோபம் வந்தது. ஏனெனில், அவன் கூறியதற்கும் அவன் நடக்கைக்கும் ஒற்றுமையாயில்லை. ஆகையால் அவன் ஹாக்கரை நோக்கி, "நீ யந்த நீதி யென்பதைப்பற்றிச் சட்டையே செய்வதில்லை. நீ மட்டும் அதைப்பற்றிக் கொஞ்சம் கவனித்திருந்தால் இந்த விவகாரம் இப்படி நடந்திராது. இதில் நியாயம் என்பட்சத்திலிருப்பது நன்ருகத் தெரிந்த விஷயம். நீ மட்டும் சத்தியத்தை மனதில் வைத்து உண்மைப்படி சாட்சி கூறினல் இவ்விஷயம் இப்படி நடந்திராது" என்ருன்.

ஹாக்கர்:—"முருகப்பனே! நான் என் தொழில் முறைமைப்படி சத்தியமோ நியாயமோ கவனித்துத்துக் கொண்டுதானிருக்கிறேன். சரக்கை வாங்குவதும் விற்பதுமாகிய முறையில் என் நியாயமிருக்கிறது. என் நியாயம் சமயோசிதப்படி அனுசரிக்க வேண்டியதா யிருக்கிறது. முரட்டுச்சண்டையில் என் நியாயம் செல்லாது. இவ்விஷயத்தில் உன்பக்கத்தில் நியாயம் போன்ற விஷயம் இருக்கிறதென்று நான் கூறத்தடையில்லை. ஆனல் நான் ஒரு நியாயாதிபதியல்ல. எப்படி நான் நியாயம் தீர்ப்பது?" என்ருன்.

அவன் கூறிய மாதிரியும் அவன் சமாதானமும் முருகப்பனுக்குச் சற்றேனும் மனத்திற்குத் திருப்தியையுண்டாக்கவில்லை. அவன் "அய்யா சுந்தரம்பிள்ளை! நான் நியாயம் தீர்க்கும்படி உன்னைக் கேட்கவில்லை. நீ மனச்சாட்சி கூறுகிறபடி பேசவேண்டும் என்பதுதான் நான் கூறுவது" என்ருன்.

சுந்தரம்பிள்ளை:—வாலிபனே! என் மனச்சாக்ஷி என் போன்ற வயதுடையவன் நிலைமைக்குத் தக்கபடி தானிருக்கிறது. அதுபலம் பொருந்தியதல்ல. அதற்கு உரத்துப்பேசும் சக்தியாவது பெரிய செவியாவது

கிடையாது. முட்டாள் சண்டையில் பிரவேசிக்கப் போதுமான வல்லமை யதற்கில்லை.

முரு:—அது கூறுவதையும் நீ கேட்டபதில்லையென்றே தெரிகிறது.

சுந்த:—"அதற்கு அத்தாட்சி யுன் மார்பிலேயே யிருக்கிறது" என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட முருகப்பனுக்குக் கோபம் வந்துவிட்டது அவன் "என்ன அய்யா நீ கூறுவதன் அர்த்தம்?" என்றான்.

சுந்த:—நான் கூறும் விஷயம் உன் மார்பிற்குள்ளில்லை. அது உன் மார்பின் மேலேதானிருக்கிறது. அதாவது நீ அணிந்திருக்கும் அரைச்சட்டை-அச்சட்டையைப்பார். அது நான் உனக்கு விலைக்களித்ததல்லவா? என்ன விலைக்கு? அதைப் பார்ப்பவர்கள் அது என்ன விலை பெறும் என்று கூறுவார்கள்? குறைந்தது பத்து ரூபாயேனும் பெறும் என்பார்கள். ஏனெனில் அது முதல்தரமான பட்டு; சரிகை வேலை செய்யப்பட்டது. நான் அதை யுனக்கு மூன்றே ரூபாய்க்குக் கொடுத்தேன். இம்மாதிரி தன் பொருளை விற்கும் ஒருவனுக்கு மனச்சாட்சி யெப்படிப்பட்டதா யிருக்கு மென்பதை யாரேனும் கூறலாகும். நீ என் மேல் கோபம் கொள்வது சரியல்ல.

முரு:—சேசே! நான் உன்மேல் ஒருபோதும் கோபம் கொள்ளமாட்டேன். நீ அச்சமயம் உண்மையின் பக்கம் நிற்காமற் போய்விட்டாய் என்பதே யென் மனதில் உறுத்தியது.

சுந்த:—நீ என்மேல் கோபம் கொள்ளாததற்காக மிக்க சந்தோஷமடைகிறேன். உனக்கு இன்னொரு விஷயம் சினேகபாவமாய்க் கூறக்கருதுகிறேன். அதாவது

பழைய நண்பரிடம் ஒருபோதும் சச்சரவு வைத்துக் கொள்ளலாகாது. நீ இக்குலசேகரனிடம் ஒரு போதும் சண்டை வைத்துக் கொள்ளாதே. அந்த விஷயத்தில் உங்களுக்குள் மிக்க வித்தியாசமிருக்கிறது. அவன் கொல்வதையே தொழிலாகவுடையவன். ஒரு மனிதன் சர்மத்தை யுயிரோடுரிப்பதும் ஒரு செத்த ஆட்டின் தோலையுரிப்பதும் அவனுக்கொன்றே. அவன் அதே தொழிலில் சதா பழக்க முடையவன். அதற்கு வேண்டிய ஆயுதங்களெல்லாம் அவனிடம் எப்போதுமிருக்கின்றன.

முருகப்பன் புன்னகையோடு "அதனுலேயே அப்படிப்பட்டவனுக்குப் பயந்து நடக்கவேண்டுமென்பது உன் கொள்கை போலும். அத்தகைய கொள்கை யெனக்கு உடன்பாடல்ல. நீதிக்கு ஒருமனிதன் அஞ்சவேண்டும். பெரியோர்க்குப் பயப்படவேண்டும். கடவுளுக்கு அஞ்ச வேண்டும். ஆயினும் நியாய வழியில் செல்லும் ஒருவன் இத்தகையோர்க்கு, தாய் தந்தை குருவுக்குக்கூட பக்தியாகிய மரியாதை காட்டவேண்டுமேயன்றி யஞ்சவேண்டுவதில்லை. ஆனுல் அயோக்கியர்களுக்கும் துஷ்டர்களுக்கும் பயப்படுவது வீரத்தன்மையாகாது. அது கோழைத்தனமேயாகும்" என்றான்.

ஹாக்கர்:—"நண்பனே! நீ நல்ல புத்திசாலி, யோக்கியன், அடக்கமுடையவன். ஆகையால் நான்—உலக அனுபவமறிந்து, பலமாதிரி மனிதர்களோடு பழகியவன் கூறும் சங்கதியை மனதில்வை. நான் கூறுவது நீ எண்ணுகிறமாதிரி யவனுக்குப் பயப்பட வேண்டுமென்ற பொருளிலல்ல. பெரியோரிடம் விரோதம் கொண்டாலும் அதனுல் நமக்கு நன்மையேயுண்டா

கும். ஏனெனில் அவர்கள் நம்மைத் துர் நெறியினின்றும் திருப்பி நல்வழிக்குக் கொண்டு வருவார்கள். ஆதலின் 'நூறு ஆன்றோர் விரோதத்தைப் பெறலாம், ஒரு போக்கிரியை விரோதியாக்கிக் கொள்ளலாகாது' என்பது மேலோர் விதி. ஒரு சுத்த வீரனை விரோதியாக்கிக்கொண்டால் அவன் ஒரு சிங்கத்தைப் போல் எதிரில் நின்று நம்மிடம் யுத்தம் புரிவான். ஒரு போக்கிரியை விரோதியாக்கிக் கொண்டால் அவன் இருட்டான வழியில் நாம் செல்லும்போது பின்னால் வந்து வெட்டி விடுவான். ஆகையால் தான் பெரியோர் 'யோக்கியனிடம் விரோதம்கொள்ளலாம்; போக்கிரிக்கோ அஞ்சவேண்டும்' என்று கூறி யிருக்கின்றனர். நீ யிதை மனதில் வைத்து நட" என்றான்.

அச்சமயம் கேளிக்கைக்கூட்டம் கலைந்து அவரவர்கள் படுக்கைக்குச் செல்லத் தொடங்கினார்கள். முருகப்பனும் தனக்கு விடப்பட்ட விடத்திற்குச் சென்று சயனித்துக் கொண்டான்.

தைரியநாதம் பிள்ளையின் புத்திரிகளாகிய மீனாள், புனிதவதி யிருவரும் ஒரே படுக்கையில் படுப்பது வழக்கம். இதுகாறும் அவர்கள் இருவர் மனமும் ஒன்றாகவே யிருந்தது. ஏனெனில் ஒருவர்க்குத் தெரியாத இரகசியம் இன்னொருவரிடம் ஒன்றுமேயில்லை. ஒருத்தி ஏதேனும் ஒரு இரகசியத்தை யறிந்தால் மறு விநாடியே யதை மற்றவளிடம் கூறுவாள். ஆனால் இந்தக் குலசேகரன் அவர்கள் குடும்பத்தில் வந்து சேர்ந்ததுமுதல் அவர்கள் ஒருவர் மனதில் தோன்றும் இரகசியங்களை முன்போல் மற்றவர்க்கு வெளியிடக் கூடாதவர்களாய் விட்டார்கள். அந்த உண்மையை யவர்கள் ஒருவருக்கொருவர் அறிவித்துக் கொள்ளாவிடினும் தங்கள் மனதில் உணர்ந்தார்கள்.

புனிதம் குலசேகரனைப்பற்றித் தாழ்வான மதிப்புக் கொண்டிருக்கிருள் என்பது மீனுள் மனதிற்குப் பட்டது. புனிதமோ "யாரோ தவருய் நமது தந்தைக்கு முருகப்பன் மேல் கெட்ட அபிப்பிராயத்தை யுண்டாக்கினர்கள். மீனுளும் முன்பின் யோசியாமல் முட்டாள் தனமாகவும் அநீதியாகவும் அந்தத் தவருன அபிப்பிராயத்தில் சேர்ந்து கொண்டாள்" என்று கருதினுள். இவர்கள் ஒவ்வொருவர்க்கும் தன்சகோதரியிடம் முன்போல் மனவொற்றுமையில்லை யென்பது தெரிந்தது. வெளிக்குமட்டும் சகோதரிகளிருவரும் முன்போலவே அன்போடு நடந்து வந்தார்கள்.

இதனுல் அன்றிரவு இருவரும் சயனித்துக்கொண்டதும், தங்கள் தந்தை, தங்களைக் குறுக்குத் துறைக்குக் கேளிக்கைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறியதைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசவில்லை. முன் போலிருந்தால் தாங்கள் அங்குச் செல்லவேண்டியதற்குத் தக்க ஏற்பாட்டைப் பற்றியும் அங்குச் சென்றபின் என்ன செய்வதென்பதைப் பற்றியும் இரவு முழுமையும் பேசிக்கொண்டிருந்திருப்பார்கள். அன்றிரவு இருவரும் கனவு கண்டார்கள். மீனுள் கடலில் தான் போய்க்கொண்டிருப்பதுபோலவும், அங்கு ஏதோ ஆபத்தில் சிக்கிக்கொள்வதுபோலவும், அச்சமயத்தில் ஒருகடல்தேவதை வருவதுபோலவும் கனவு கண்டாள். புனிதவதியும் ஏறக்குறைய அம்மாதிரியே பயங்கரமான கனவு கண்டாள். இருவரும் இவ்வாறு கனவு கண்டிருக்கையில் இருவர் செவிகளிலும் ஒருவிதமான பாட்டுக் கேட்டது. இருவரும் உடனே திடுக்கிட்டு விழித்துப் பார்த்தார்கள். பிச்சிமலை நாகம்மாள் தீபத்தின் முன் தங்களருகில் உட்கார்ந்து பாடிக்கொண் டிருப்பதைக் கண்டார்கள்.

இரண்டு சகோதரிகளுக்கும் நாகம்மாள் நன்ருகத்

தெரியுமாயினும் அந்த வேளையில் எதிர்பாராதவண்ணம் அவர்கள் அவளை யங்குக்கண்டது அவர்களுக்கு அச்சத்தை யும் மனக்கலக்கத்தையும் உண்டாக்கிவிட்டது. அவளுடைய தோற்றமே யாவர்க்கும் அச்சத்தை யுண்டாக்கத் தக்கது. மீனாள் அவள் விஷயங்களில் பூரண நம்பிக்கை யுடையவள். அவள்கூறும் விஷயங்கள் பயங்கரமான விஷயங்களாகவிருந் தாலும் மீனாள் அவற்றை யுண்மையாகவே நம்பிக்கொண்டு பீதியடைவாள். புனிதவதியோ நாகம்மாள் விஷயத்தில் அவளுடைய வார்த்தைகளில் நம்பிக்கையில்லா விடினும் பீதிமட்டு மடைவாள்.

சகோதரிகளுக்கு இத்தகைய உணர்ச்சி யிருந்ததால் மீனாள் தனக்கு முதலில் உண்டான வியப்பும் அச்சமும் குறைந்ததே, "நாகம்மாள் ஏதோ நமது வினைப்பயனைப் பற்றியே கூறவந்தாள்" என்று கருதிக்கொண்டு சட்டென் றெழுந்து அவள் அருகில் செல்லக் கருதினாள். புனிதமோ நாகம்மாள் சற்று புத்தி சபலமுடைய ஒரு மாதென்ற எண்ணமுடையவளாயினும் அவள் விஷயத்தில் அச்சமும் பயமுமுடையவளே. அவள் தன் தமக்கையைச் சட் டென்று பிடித்துக்கொண்டு "நீ எழுந்திருக்கவேண்டாம். இங்கேயேயிரு. நான் யாரையேனும் உதவிக்கு அழைத்து வருகிறேன்" என்றாள். ஆனால் மீனாளுடைய பிராரப்த வினைப்பயன் இருந்த அளவிற்குத் தக்கபடி அவள் புத்தி யும் சென்றது.

புத்தி கன்மானுசாரணியன்றோ. அதாவது நமது வினைப்பயனை நாம் அனுபவிக்க வேண்டிய வழியிலே நமது மனம் செல்லும் சமயத்தில் அம்மனதைத் திருப்ப நமக்கு முடியாது. மனம் நம்மைக் கெட்டவழிக்கு இழுக்கிறதென்று நமக்குத் தெரிந்தால் நாம் ஒருபோதும் அவ்வழி செல்லோம். ஆகையால் அச்சமயம் நமது புத்தி

கூறும் ஆலோசனை நமக்கு நல்ல பயனை யளிப்பதாகவே தோன்றும். ஆனால் அதை நம்பிக்கொண்டு நாம் சென்ற பின் வரவர அதனால் தீயபலன்களே யுண்டாகும். இதனாற்றான் "புத்தி கன்மானுசாரணி" என்று கூறப்பட்டது. ஆகையால் மீனாள் தன் தங்கை கூறிய எச்சரிக்கையைக் கவனிக்கவில்லை. ஆகையால் அவள் தன் படுக்கையைவிட்டு எழுந்து தன் மேற்போர்வையை யணிந்துகொண்டு சென்று நாகம்மாளை நோக்கி,

"என் அன்பார்ந்த நாகம்மாள்! நீ கூறும் வார்த்தைகள் எங்களைப்பற்றியதாகவிருந்தால் எங்களில் ஒருத்தி அதை மரியாதையோடும் பக்தியோடும் அச்சமின்றி ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக விருக்கிறாள்" என்றாள்.

புனிதவதி தடுமாற்றமான குரலோடு "நாகம்மா! என் அன்பார்ந்த நாகம்மா! நீ என்ன கூறுவதாயினும் அதை நாளைக்குக்கூறு. நான் வேலைக்காரியை யழைத்து உனக்கு இரவிற்குப் படுக்கை ஆயத்தம் செய்யச் சொல்கிறேன்" என்றாள்.

**நாகம்மாள்:**—எனக்கு இராத்திரிக்குப் படுக்கைவேண்டாம். என் கண்கள் மூடப்படலாகா. அவைகள் அனேக அபூர்வ விஷயங்களைக் கண்டன. இப்போது என் வேலை முடிகிறவரையில் அவைகள் மூடப்படலாகா. ஆகையால் ஓ மீனாள்! உட்கார். ஓ! கலவரமடைந்த மனமுடைய புனிதம்! நீயும் உட்கார். இருவரும் நான் கூறுவதைக் கேளுங்கள். விளக்கைத் தூண்டுங்கள். போர்வைகளைப் போர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் என்சங்கதி முடிவதற்குள் உங்களுக்குக் குளிரைவிட அதிகமான நடுக்கலெடுத்துக் கொள்ளும்.

**புனிதம்:**—நாகம்மா! அப்படியானால் நீ கூறும் சங்கதி

யைக் காலையில் கூறு; பொழுதுவிடிய நெடுநேரமில்லை; கொஞ்சநேரமே யிருக்கிறது. நீ கூறும் சமாசாரம் பயங்கரமானதா யிருந்தால் அதை இந்தவேளையில் கூறுவதைவிடப் பொழுது விடிந்தபின் கூறுவதுதான் நலம்.

மூதாட்டி:—“ஏ முட்டாள்! பேசாமலிரு; நான் கூறப்போகும் சங்கதி வானத்திலுள்ள சூரியனையே நடுங்கிக் கீழே விழச்செய்யும் நடுப்பகலுக்குள் சுமார் நூறுபடகுகள் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்கக் கரையைவிட்டுச் செல்லப் போகின்றன் அவையெல்லாம் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொள்ளும். அத்தகைய சமாசாரத்தை நாகம்மாள் பகலிலா கூறுவாளென் றெண்ணுகிறாய்! ஒருகாலு மில்லை. இரவில் கூறவேண்டியதை யிரவில்தான் கூறவேண்டும்” என்றாள்.

இதுகாறும் மூதாட்டியின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு பேசாமலிருந்த மீனாள் அப்போது அவளை நோக்கி “பாட்டி! என்தங்கை பயங்காளி. இரவில் பயங்கரமான சங்கதிகளைக்கேட்க நடுங்குபவள். ஆகையால் நீயவளை மன்னித்துக் கூறப்போகும் சங்கதியை இன்னொரு இடத்தில் பகலில் கூறவேண்டு மெனக் கேட்டுக்கொள்கிறேன்” என்றாள்.

அம்மொழிகளைக் கேட்டதே நாகம்மாள் கோபத்தால் முகம் சிவந்து “ஏ மீனாள்! பேசாமல் நான் கூறுவதைக்கேள். நான் கூறப்போகும் சங்கதியை இப்போதே யிந்த இடத்திலேயே கூறவேண்டும். அதன் சாராம்சத்தைக் கேட்டதே பயங்கரமான இருண்ட மலைக்குகையிலுள்ள ஆவேசம் வெளிக்கிளம்பும். அது வெளிவரும்போது கடற்பரப்பில் எவ்விதக் கப்பலேனும் படகேனும் பாய்விரித்துச் செல்லலாகாது. ஆகையால் இரவிலேயே யதைக்கூற

வேண்டும். அதுவும் இதோ எரிகிற இரும்புத்தீபம் அணை யும் முன்பே கூறி முடிக்கவேண்டும். இந்தத்தீபம் எந்த இரும்பால் செய்யப்பட்டது தெரியுமா? சாகரத்தீவின் தலைவனுயிருந்த குரூரசேனம் பிரபு தன் தம்பியை நள்ளிரு ளிற் கொன்றுவிட்டு அதற்காகத் தூக்கில் போடப்பட்டா னல்லவா! அத்தூக்கு மரத்திலிருந்த ஆணிகள் சட்டங்க ளின் இரும்பினுல் செய்யப்பட்டது. இத்தீபத்தையெடுத்து நமக்கு மத்தியில்வை. ஏனெனில் அதன் வெளிச்சம் வீசிக் கொண்டிருக்கும் வட்டத்திற்குள் எந்தப் பூதமும் வரமுடி யாது" என்றுள்.

மீனுள் பார்த்தாள்; மேலும் அவள் வார்த்தைகளை மறுத் துக் கூறினுல் மோசமாய் முடியும்போ லிருந்தது. ஆகை யால் பேசாமல் அவள் கூறியபடியே தீபத்தை யெடுத்து வைத்தாள். அதன்மேல் நாகம்மாள் பின்வருமாறு கூறத் தொடங்கினுள்:

"பெண்களே! நான் உங்கள் தந்தையின் சுற்றத்தா ளென்பது உங்களுக்குத் தெரியும். ஆயினும் எம்மாதிரி சுற்றத்தா ளென்பதும், உங்கள் தந்தைக்கும் எனக்கும் எங்கள் பாலியத்தில் எத்தகைய சம்பந்த மிருந்ததென்ப தும் உங்களுக்குத் தெரியா. இருக்கட்டும். அவற்றைப்பற்றி யவசியமில்லை. நம்தேகங்களில் ஓடுவது ஒரேகுலத்தின் இரத்தம் என்பது எப்படி என்பதை மட்டும் கூறுகிறேன். உங்கள் பாட்டனும் என் தந்தையும் சகோதரர்கள். அவர்களுக்குள் ஆதியிலேயே விரோதம் இருந்தது. பிறகு பிதுரார்ச்சித ஆஸ்தி யிருவர்க்கும் பகிர்ந்து கொடுக்கப் பட்டபோது உங்கள் பாட்டன் இங்கிருந்த பூமியையெடுத் துக்கொள்ள என்தந்தை வடக்குத்தீவின் மலைப்பிரதே சத்திலிருந்த காட்டுப் பூமியை யெடுத்துக்கொண்டார். சகோதரருக்குள் தங்கள் பங்குபாகம் பாரபட்சமாகச்

செய்யப்பட்டதாய்க் கருதப்பட்டது. என்தந்தை தமக்கு அக்கிரமம் செய்யப்பட்டதாக எண்ணினர். அதனல் அவர் தம் சகோதரனையும் அவர் வாசஸ்தலத்தையும் சபித்து விட்டுப் போய்விட்டார்.

என்தந்தை நான் கூறியபடி மலைப்பிரதேசங்களில் குன்றுகளும், இருண்ட அடவிகளும், காளுறுகளும், இருண்ட குகைகளும், அடர்ந்தபுதர்களும் இருக்கும் இடத்தில் தம் வாசஸ்தலத்தைத் தாபித்துக் கொண்டார். நம் நாட்டிலிருந்த பூர்வீக இரகசிய சாத்திர அனுபவங்களெல்லாம் அவருக்கு நன்ருகத்தெரியும். அவர் அவற்றையெல்லாம் எனக்குப் போதிப்பதிலேயே தமது வாழ்நாள் முழுமையும் கழித்தார். நானும் அவற்றைக் கற்றுக்கொள்வதில் மிக்க சிரத்தை யுடையவளாக விருந்தேன்.

முற்காலத்தில் நமது பூர்வீகர்கள் தங்கள் தெய்வங்களுக்கு நரபலி முதல் பலவிதப்பலிகள் கொடுத்துக் கொண்டிருந்தார்களல்லவா! அவற்றைப் பற்றிய பல பிரதான பலியிடங்கள் அங்கு இருக்கின்றன. இன்றும் அங்குள்ள பலிபீடங்களாகிய சதுரமான பாறைக் கற்களின்மேல் உறைந்து உலர்ந்திருக்கும் இரத்தக் கறைகளைக் காணலாகும். நம் நாட்டாரில் அனேகர் அந்தத்திக்கே செல்வதற்குக்கூட நடுங்குகிருர்கள். ஆனல் அப்படிப்பட்ட ஒவ்வொரு இடங்களையும் நான் கண்டிருக்கிறேன். ஆனல் எத்தகைய அபாயமான-பயங்கரமான தியாகத்தின்மேல் நான் அந்த வித்தைகளைக்கற்றுக்கொண்டு அபூர்வ சக்தியைப் பெற்றேன் தெரியுமா? அப்பா! அதை வெளியிடமுடியாது.

அங்கு குள்ளன் பாறை யென்ற ஒரு இடமிருக்கிறது. புதிதாக வருகிறவர்கள் அதையொரு அதிசயமாய் வந்து பார்ப்பார்கள். ஊரார் அதைக்காண நடுங்குவார்கள். குள்ளன் என்ற பிரசித்திபெற்ற வீரனுடைய ஆவேசம்

அங்கு இப்போதும் பலருக்குக் காணப்படுகிறது. அப்பாறையின் வெளிப்பக்கத்தில் இரண்டு கற்கதவுகள் திறந்தபடியிருக்கின்றன. அவற்றைப் பார்க்கும்போதே அவை மனிதரின் கரங்களால் செய்யப்பட்டவையல்லவென்று தெரிந்து கொள்ளலாம். அக்குள்ளனுக்குச் சரியான பூசைபோட்டு உபாசிப்பவர்களுக்கு அவன் பிரத்யட்சமாகி அபூர்வச் சக்திகளை யளிக்கிருன். ஆனல் அதற்குக்கொடுக்க வேண்டிய விலையிருக்கிறது. என்னவென்று அறிந்தால் உங்கள் குலைகள் நடுங்கிவிடும். காட்டில் ஆடுமேய்க்கும் இடையன்கூட அக்குள்ளன் பாறைக்கருகில் செல்லமாட்டான், ஏனெனில் குள்ளனுடைய ஆவேசம் ஒவ்வொரு சமயம் திடீலென்று அங்குதோன்றும். அந்த ஆவேசத்திற்கு எனக்குச் சற்றேனும் பயம் தோன்றவில்லை. ஏனெனில் நான் அடையக் கூடிய சக்தியை—சாதாரண மனிதர் அடைய முடியாத அபூர்வமான சக்தியை யடையவேண்டுமென்பதே எனது பேராவலாக விருந்தது. நம் பூர்வீகமாதராகிய முன்னேர்கள் அடைந்திருந்த சக்தியை நாம் எப்படியேனும் அடையவேண்டுமென்ற ஆவலே எனக்கதிகமாகவிருந்தது. நிஷேதிக்கப்பட்ட வழிகளிற் சென்றேனும் அவ்வல்லமையை யடையவேண்டு மென்று எனக்குள் உறுதிகொண்டேன். அவர்களைப்போல் பஞ்சபூதங்களை யாளும் வல்லமையைப்பெற ஆசை கொண்டேன். நான் பன்முறை அந்த விடத்தில் இருக்கும் மூலஸ்தானத்தின் கல்லருகிலிருந்து பார்த்து அதில் தோன்றும் அபூர்வ ஜோதியைத் தரிசித்தேன். அது யார் பக்தியோடும் நம்பிக்கையோடும் அங்கு உபாசனை செய்கிருர்களோ அவர்களுக்கு மட்டுமே தோன்றும். அதுமட்டுமல்ல சாதாரண மனிதர் இதுகாறும் கண்டறியாத அனேக அற்புத விஷயங்களை நான் அங்குகண்டேன். அவற்றுல் என் உளம்பூரித்து

விட்டது. ஏனெனில் சாதாரணமனிதர்க்குக் கிடைக்காத அபூர்வசக்திகள் எனக்குக் கிடைத்து விட்டனவென்று அப்போதே யெனக்குப் புலப்பட்டது. அவற்றின் மூல இரகசியங்கள் அந்த அபூர்வமான சோதியில் எனக்கு நன்ருகப் புலப்பட்டன. என் மனதிலுண்டான உற்சாகமாகிய ஆவேசத்தால், என்முன் பிரத்யக்ஷமாகி எனக்கு அவ்வல்லமைகளை யருளவேண்டுமென்று அத்தேவதையைப் பிரார்த்தித்தேன்" என்ருள்.

அதைக்கேட்ட மீனுள், "அந்தத் துஷ்ட தேவதை யுன் வேண்டுகோளுக் கிரங்கியதோ?" என்ருள்.

நாகம்மாள் அச்சத்தோடு "ஏ மீனுள்! கொஞ்சம் அடக்கமாகப்பேசு - நீ யத்தேவதையை யிழிவாய்க்கூறினையோ அதன் கோபத்திற்குத் தப்பித்துக் கொள்ளமாட்டாய், பத்திரம். நீ கூறுவது அதற்குத் தெரியாதென்று கருதவேண்டாம். அது இப்போது இதே இடத்திலிருக்கும். நீ கூறுவதைக் கேட்டுக்கொண்டே யிருக்கும் - பத்திரம்-பத்திரம்" என்ருள்.

அதுவரையில் தன் தமக்கைக்கும் நாகம்மாளுக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண் டிருந்த புனிதம் தட்டென்று தன் ஆசனத்தை விட்டெழுந்து "நான் செல்கிறேன். பேய்கள் பிசாசுகளின் கதைகளை நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். என்னுல் இவற்றைக் கேட்கமுடியாது. அதிலும் இத்தகைய இரவுகாலத்தில் கேட்க என்னுல் முடியாது." என்ருள்.

அவள் கூறியவாறே அறையைவிட்டுப் புறப்பட முயன்ருள். ஆனுல் மீனுள் அவளைத் தடுத்தாள்.

## 27-வது அத்தியாயம்.

புனிதம் தன் தமக்கையை நோக்கி:—" அக்கா! இத்தகைய பயங்கரமானகதைகளை யிரவில் கேட்க என்னால் முடியாது " என்றாள்.

மீனாள்:—" நமது தந்தை அத்தகைய கதைகளைக் கூறும் போது அவற்றை நம்பமாட்டேனென்ற உன்னுடைய தைரியம் இவ்வளவுதானா? இப்போது நாகம்மாள் கூறப்போவது பெரும்பாலும் நமது தந்தையுடையவும் இக்குடும்பத்தினுடையவும் விஷயங்களைப் பற்றியே யிருக்கும். என்போன்றவளே என் நிரபராதத் தன்மையையும் கடவுளையும் நம்பி இதனாலுண்டாகும் கெடுதி நம்மையொன்றும் செய்யாதென்ற தீரத்தோடு இதைக் கேட்கத் துணிந்தபோது, இவ்விஷயங்களை நம்பாத நீ இதற்காகப் பயப்பட வேண்டிய காரணமே யில்லையே. நான் கூறுவதைக்கேள். குற்றமற்ற நெஞ்சு ஒருபோதும் பயப்பட வேண்டியதில்லை. " என்றாள்.

புனிதம்:—"நீ கூறுகிறபடி ஆபத்து ஒன்று மிராதுதான் ஆனால் மிக்க பயமிருக்கிறது. ஆயினும் நான் உன் கூடவிருக்கிறேன். ஏனெனில் முக்கியமாய் உன்னை யிப்பயங்கரமான மாதோடு ஒன்றியாக விட்டுப்போக எனக்குப் பிரியமில்லை " என்று குசுகுசுவெனக் கூறினாள். பிறகு இன்னும் இரகசியமாக "நான்போய் வேறுயாரையேனும் உனக்குத் துணையாக இங்கனுப்பலாமெனில் என் அறைக்கும் இந்த இடத்திற்குமிடையில் நீளமான இருண்ட தாழ்வார வழியிருக்கிறது " என்றாள்.

நாகம்மாள்:—" ஒ பெண்ணே! இங்குவேறு எவரையும்

அழைத்துவராதே பத்திரம்! நான் என் கதையைக் கூறுவதற்கு இடையூறு செய்யாதே; மறுபடிமறுத்துப் பேசாதே. ஏனெனில் அச்சங்கதியித்தீபம் அணைந்து விட்டபின் கூறப்படலாகாது - கூறவும் முடியாது'' என்ருள்,

புனிதம்:—''நற்காலமாய் தீபம் வரவரக் குறைந்த பிரகாசத்தோடேயே யெரிகிறது என்ருல் கூடுமானுல் மெதுவாய் அதை ஊதியணைத்து விடுவேன்'' என்று தனக்குள்ளாகவே கூறிக்கொண்டு, விதியில்லையெனப் பேசாமல் தன் தமக்கையருகி லுட்கார்ந்து நாகம்மாள் கூறுவதைக் கேட்கத் தொடங்கினுள்.

நாகம்மாள் மறுபடி தன் கதையைக் கூறத்தொடங்கிப் பின்வருமாறு மொழிந்தாள்:—

''ஒருநாள் மிக்க உஷ்ணமான வெயிற்காலத்தில், சுமார் நடுப்பகலில் நான் குள்ளன் பாறையருகில் உட்கார்ந்துகொண்டு மேற்கூறிய சோதி தோன்றுமிடத்தை நோக்கியபடி யிருந்தேன். அச்சமயம் என்மனதில் என்னை யறியாமலே ஒருவித உற்சாகம் தோன்றியது; அதோடு நான் முன்புகேட்ட ஒரு உச்சாடனம் என் நினைவிற்கு வந்ததும் நான் ஒரே நிலையான மனதோடு அதை யுச்சரிக்கத் தொடங்கினேன். நான் அந்த உச்சாடனத்தைக் கூறி முடித்தேனே இல்லையோ—அதுவரையில் நன்ருய் வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த சூரியன் தட்டென்று மங்கி இருள் சூழ்ந்துவிட்டது. அப்போது பட்டம்பகல் பனிரண்டு மணியாயிருந்தாலும் நடு இரவுபோல் ஆகிவிட்டது. வானத்தில் கரியமேகங்கள் நெருங்கிக் குவியத் தொடங்கின. யுகாந்தகாலம் வந்துவிட்டதோ வென்று கருதுமாறு எங்கும் இருள்சூழ்ந்தது. நான்குகஜத்திற்கு முன் இருப்பது கண்களுக்குப் புலப்படவில்லை. எனக்கே

பெரும் பீதியாய்விட்டது. உலகம் அழிக்கப்படும் காலம் இதுதானோ வென்றஞ்சினேன். அச்சமயம் வானமுகடே பிளவு பட்டதுபோல ஒரு மின்னல் தோன்றியது. அந்த மின்னலின் வெளிச்சத்தில் தூரத்திலிருந்த குன்றுகளும் பள்ளத் தாக்குகளும் இருண்ட அடவிகளும் காறுறுகளும் பளிச்சென்று தோன்றின. அதன்பின் பயங்கரமாகக் காற்று மழை தொடங்கியது. நான் அப்பாறையின் ஒரு மூலையில் மறைந்துகொள்ள வேண்டியதாயிற்று.

நான் அந்தப் பெரியகுகையின் கோடியிலிருந்த ஒரு பெரிய கல்லின்மேல் சயனித்துக் கொண்டு நான் அப்போது இருந்த இடத்தின் புராதன சரித்திரத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந்தேன். அதோடு எதிரிலிருந்த ஒரு சிறு கல்பலகையின்மேல் என் நாட்டத்தைச்செலுத்தியிருந்தேன். எனக்கு ஒரு மாதிரியான உறக்கம் உண்டாயிற்று. ஆனால் என்மனதில் நானே எவ்விதமான பயங்கர சிந்தனையும் கொள்ளவில்லை. நடந்த விஷயம் என்ன காரணத்தால் நேர்ந்ததோ என்றால் கூற முடியாது.

எனக்கு மெதுவாய் நித்திரை வந்துவிட்டது. அப்போதும் இரண்டாம் முறை யிடித்த பயங்கரமான இடிகளால் நான் தட்டென்று விழித்துக் கொண்டேன். நான் கண்களைத் திறந்தபோது அங்கிருந்த சொல்ப வெளிச்சத்தில், எனக்கு நேராக எதிரிலிருந்த ஒரு சதுரமான கற்பலகைமேல் ஒழுங்கான உருவமல்லாத ஒரு குட்டையான ஆள் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அந்த ஆளின் உருவம் அந்த விடத்தை நிறைத்துக்கொண்டிருந்தது. நான் அவ்வுருவத்தைக் கண்டதும் திடுக்கிட்டு விட்டேன். ஆனால் பீதியடையவில்லை. ஏனெனில் என் முன்னோர்களின் இரத்தம் என் தேகத்தில் ஓடியதால் என் இயற்கையான தைரியம் அதாவது பீதி யின்மை என்னைவிட்டு நீங்கவில்லை.

அச்சமயம் மிக்க பயங்கரமான இராட்சசன் என் முன் நின்றிருந்தாலும் நான் பீதி யடைந்திருக்கமாட்டேன். ஆகையால் நான் பேசாமல் அவனை யுற்று நோக்கியபடி யிருந்தேன்.

அவன் வாய் திறந்து பேசத்தொடங்கினன். அவன் பேசிய பாஷை பூர்வீக பாஷையாக விருந்தது. என் தந்தையையும் என்னையும் தவிர மிகச் சிலரே அப்பாஷையை யறிந்துகொள்ளக்கூடும். அம்மொழிகளின் அர்த்தமும் பூர்வீகக் குருமார் வார்த்தைகள் போல் மறைவான பொருளுடையவைகளாகவே யிருந்தன. நான் அவ்வுருவம் கூறிய மொழிகள் யாவும் கேட்டதே அதே மாதிரிப் பாஷையில் அதற்குப் பதில் கூறினேன்.

ஏனெனில் என் முன்னோர் இரத்தம் என் தேகத்தில் ஓடுவதால் எனக்கு அவ்வுருவத்தைக்கண்டு சற்றும் பீதியுண்டாகாமல் ஒருவித ஆவேசமே யெனக்குண்டாயிற்று. ஆகையால் அச்சமயம் எனக்குத்தோன்றியபடி நான் அதே பாஷையில் விடையளித்தேன். நான் கூறிய மொழிகளைக் கேட்ட அப்பூதம் கோபத்தோடு உறுமியது. மறுவிநாடி அது ஒரு தடித்த கரிய புகையாகமாறி உடனே மாயமாக மறைந்து விட்டது.

அந்த விநாடி வரையில் எனக்குப்பயம் என்பது தோன்றவில்லை; ஆனல் அப்பூதம் அவ்வாறு உருமாறி மறைந்ததே எனக்குள் பீதி தோன்றியது. நான் எழுந்து வெளியிடத்திற்கோடினேன். அப்போது வானத்திலிருந்த இருள் நீங்கி வானம் மாசின்றி விளங்கியது. நான் உடனே அந்த விடத்தை விட்டு வீட்டை நோக்கிச் சென்றேன். அப்பூதம் கூறிய வார்த்தைகளைச் சிந்தித்துக் கொண்டே சென்றேன். அவ்வார்த்தைகள் வரவரப்பின்னல் எனக்கு விளங்கியதைப்போல் அச்சமயத்தில் விளங்கவில்லை.

அத்தகைய தோற்றம் என் மனதினின்றும் ஒரு கனவைப்போல் அவ்வளவு சுலபமாய் மறைந்துபோனது உங்களுக்கு வியப்பாகவே தோன்றும். ஆனால் உண்மையில் நடந்தது அவ்வாறே. இதுநமது மனோபாவனையாலுண்டான பொய்த் தோற்றமேயென்று என் மனதிற்கு நானே சமாதானம் கூறமுயன்றேன். "நாம் நெடுநேரம் தனியாக விருந்தபடியால் நமக்குள்ளாகவே விபரீதமான விஷயங்களையெல்லாம் சிந்தித்துக்கொண்டோம்" என்றெண்ணி பிறகு அத்தகைய சிந்தனைகளை விட்டு விட்டு வாலிப நண்பர்களோடு கூடிக்கொண்டு காலங்கழிக்க முயன்றேன். நான் ஒரு காலத்தில் குறுக்குத் துறைக்கு வந்தேன். அப்போது என் நண்பரில் ஒருவர் என்னை யுன் தந்தைக்கு அறிமுகமாக்கி வைத்தார். அவருடைய நோக்கம் மனத்தாபத்தோடிருக்கும் இரண்டு சுற்றத்தாரையும் சமாதானமாக்கி வைக்கவேண்டுமென்பதே. உன் தந்தையும் பிரிந்திருந்த தன் சுற்றத்தானைச் சந்திக்க ஆவலுடையவராக விருந்தார்

காலங்கடந்ததால் உங்கள் தந்தையின் மனம் மிருதுவடைவதற்குப் பதிலாகக் கடினமே யடைந்தது. ஆனால் அவருடைய உருவமும், தைரியமும், வீரம், களங்கமற்ற உள்ளம், நேர்மை, பிறரைச் சந்தோஷப்படுத்த் விருப்பம் முதலிய குணங்களும் மட்டும் வடநாட்டுத் தன் மூதாதைகளின் இயற்கையைவிட்டு மாறவேயில்லை. இத்தகைய குணங்களிருந்ததால் அவர் ஒரு கன்னிகையால் காதலிக்கப் படற்குரியவரே. உங்கள் தந்தையை நான் காதலிக்கலாம் அவரும் என்னைக் காதலிக்கலாம் என்பதைப்பற்றி என் தந்தை மனப்பூர்வமான அனுமதியளித்தார்.

ஆயினும் அந்தோ, இன்னொருவன் இடையில் முளைத்தான். கெட்ட காலத்திற்கு அடியோடு அறிமுகமல்லாத புதிய மனிதன் ஒருவன் தோன்றினன். அவன் எங்களுக்

குத் தெரியாத தந்திர சாமர்த்தியங்களைக் கற்றவன். அதோடு மாதரை மயக்கும் வஞ்ச நடைகளும் பாவனை களும் நன்றாக அறிந்தவன். உங்கள் தந்தைக்கு அவை யடியோடு தெரியா. அப்புது மனிதன் எங்கள் மத்தியில் வந்தபோது மிக்க மேலான ஒரு புது உலகிலிருந்து வந்த நம்மிலும் மிக்க உயர்தரமான மனிதனைப்போல் தோன்றி ளுன்.

ஓ கன்னிகைகளே! நீங்கள் என்னை நோக்குவதைப் பார்த்தால் "அடடா! அப்படிப்பட்ட மனிதன் இவள் மேல்கூட எங்கேனும் காதல் கொள்வானே" என்று வியப் படைகிறீர்களென்று தெரிகிறது. அது சுபாவமே. ஏனெ னில் என்னுடைய தற்கால உருவமட்டுமே யுங்களுக்குத் தெரியும். என் வாலிப வுருவத்திற்கும் இப்போதிருக்கும் உருவத்திற்கும் உள்ள வித்தியாசம், ஒரு யௌவனப் பெண்ணின் கன்னிப்பருவத்திலிருந்த உருவத்திற்கும் அவள் வயோதிகமடைந்து மரித்தபின் அவள் சவத்தின் உருவத்திற்கும் உள்ள வித்தியாசம் போன்றதே. ஓ பெண் களே! என்னை நன்றாகப்பாருங்கள். அதிலும் இந்த மங்க லான தீபவொளியில் என் உருவத்தை நோக்குங்கள். இந்த நரைதிரை நிரம்பிய முகத்தையுடைய உருவம்-சதைப் பற்றும் தெளிவான பரிசுத்த இரத்தத்தின் பிரகாசமும் நீங்கி வாடி வதங்கி எலும்பும் தோலுமாய்த் தோற்றும் உருவம்—பயங்கரமான காட்சிகளைப்பார்த்துப் பார்த்துக் கடின சித்தமடைந்த உருவம். இந்த நரை கலந்த சிக்கான கூந்தலையும் அகோரப் பார்வையையும் உடைய இந்த உரு வம், ஒரு காலத்தில் யௌவன வாலிபரின் உள்ளத்தைக் கவரக்கூடியதாக இருந்திருக்குமா என்று பாருங்கள். ஆ! இந்த விளக்குக் குறைந்துகொண்டே போகிறது. என் அவ மானத்தைக் கூறும்போது அது குறைந்து கொண்டே

போகட்டும். நானும் அவனும்-அந்த அசேதகனும் இரகசிய மாக நேசங்கொண்டோம். ஒருவருமறியாமல் இரகசிய மாய்ச் சந்திக்கத்தொடங்கினேம். கடைசியில் நான் மூடத் தனமாய் ஒரு ஸ்திரீக்குரிய விலையற்ற மாணிக்கம் போன்ற ஆபரணமாகிய என் கற்பைத் தத்தம் செய்து விட்டேன். ஓ தீபமே! இப்போது ஒளிவிட்டு உன் மாந்திரீகப் பிர காசத்தைக்காட்டு. உன் வல்லமை பொருந்திய ஒளியைக் காட்டி உன்னை நெருங்க முயலும் துஷ்ட ஆவேசத்தை எட்டத்துரத்து. உன் ஒளி பரவியிருக்கும் வட்டத்திற்குள் அவன் காற்றுப்பட இடந்தராதே" என்றுள்.

அவள் அவ்வாறு கூறியதே அத்தீபம் புதிதாக எண் ணெய் விட்டுத் தூண்டப்பட்ட தீபம்போல் சுடர்விட்டுப் பிரகாசித்தது. அந்த அதிசயமான காட்சியைக் கண்ட சகோதரிகள் மிக்க அச்சமடைந்து வியப்போடு மூதாட் டியை நோக்கினுர்கள்.

மூதாட்டி கூறத்தொடங்கி "நான் வீண் வார்த்தை களில் காலத்தைக் கடத்தலாகாது. நடந்த சங்கதியைக் கூறுகிறேன். என் காதல் கண்டு பிடிக்கப்பட்டது. ஆனல் செய்த அபாரமானகுற்றம் அறியப்படவில்லை. என் தந்தை வந்து என்னைத் தன் ஏகாந்த ஸ்தலத்திற்கு அழைத்துச் சென்றுர். நான் மறுபடி என் காதலனைக் காணலாகாது என்று என் தந்தை கண்டிப்பான கட்டளையிட்டு விட்டார்; ஆனல் உங்கள் தந்தை யென்னைக் காதலிப்பது அவருக்கு விருப்பமேயாதலின் அவர்மே லிருந்த புராதனவெறுப்பை மன்னித்து விட்டார். அந்தோ! நான் இனி அவர் காத லுக்குப் பாத்திரமானவளல்ல. என் எண்ணமெல்லாம் என் தந்தையின் வாசஸ்தலத்திலிருந்து தப்பித்துப்போய், என் காதலனிடம்சேர்ந்து என் மானத்தை மறைக்கமுயல

வேண்டுமென்பதே. ஆனால் அவன் வரையில் நியாயமே கூறவேண்டும். அவன் நன்றியுடையவனே. அவன் அடியோடு என்னைத் துரோகம் செய்திருந்தால் எனக்குப் பைத்தியமே யுண்டாகிவிட்டிருக்கும். ஆனால் அவன் என் மேல் கொண்டிருந்த நம்பிக்கையாலே எனக்குப் பத்தத் தனை தீங்கு நேர்ந்தது" என்றாள்.

அம்மூதாட்டி சற்றுநேரம் பேசாதிருந்தபின் மறுபடி பித்தம் பிடித்தவள்போல் பேசத்தொடங்கி, "அத்தீங்குகளே என்னை கடல்களுக்கும் காற்றுக்கும் பயங்கரமான இராணியாக்கி விட்டன" என்றாள்.

இரண்டாம் முறை மறுபடி சற்றுநேரம் மௌனமாகவிருந்து அதன்பிறகு முன்னிலும் சற்று சாந்தமாகப் பேசத் தொடங்கி, "என் காதலன் என்னைத் தன்னோடு ஓடி வந்து விடும்படி ஏற்பாடு செய்ய இரகசியமாய் நான் வசிக்கு மிடத்திற்கு வந்தான். கப்பல் அத்துறைமுகத்திற்கு வரும் சமயம் இருவரும் அதில் ஏறிப்போய்விட ஏற்பாடு செய்வதற்காக ஆலோசனை செய்யும்பொருட்டு நான் அவனைச் சந்திப்பதாக ஒப்புக்கொண்டேன். அதற்காக எங்கள் ஏற்பாட்டின்படி நான் நடு இரவில் வீட்டை விட்டுப் புறப்பட்டேன்" என்றாள்.

அச்சமயம் அவளுக்குத் துயரம் உண்டாகி விட்டது. ஆகையால் தடுமாற்றத்தோடு குழறிக்கொண்டே கூறத் தொடங்கி,

"நான் அர்த்த ராத்திரியில் வீட்டைவிட்டுப் புறப்பட்டேன். நான் வெளியிற்செல்ல என் தந்தையிருக்கும் அறையைக் கடந்துதான் செல்லவேண்டும். அவர் அறை திறந்திருப்பதாகத் தெரிந்தது. ஓகோ! இவர் நம்மேல் காவல் இருக்கிறார் என்று நான் எண்ணினேன். ஆகையால் நம் காலடிச்சத்தம் கேட்டு அவர் விழித்துக் கொள்வார்.

என்று பயந்து அவர் அறையின் கதவை மூடிவிட்டேன். இச்செய்கை மிக்க அற்பமும் குற்றமற்றதுமான செய்கையே. ஆனால் ஐயோ கடவுளே! அதனாலுண்டான விபரீதமோ, அடடா! என்ன துயரமான சம்பவம்!

காலையில் அந்த அறைக்குள் மூச்சுத் திணறத்தக்க காற்று நிறைந்திருந்தது. என் தந்தை சவமாய்க் கிடந்தார். ஆம் என்செய்கையால் இறந்து போயிருந்தார். என் செய்கையால், என் அவமானச் செய்கையால், என் இணக்கமற்ற நடத்தையால் என் அரியதந்தை மரணமடைந்தார். அதற்குப்பின் நடந்த யாவும், இருட்டில் மூடுபனியில் குருடன்முன் நடந்தவைபோலவே எனக்குத் தோன்றுகின்றன. அதன் முடிவில் நான் இதோ இப்போது பார்க்கிறீர்களே இந்த ரீதியில் அலைந்துகொண்டிருக்கிறேன். யாவரும் பார்த்து அஞ்சத் தக்கவளாய், வானத்தையும், மேகங்களையும், கடலையும், புயற்காற்றையும், இடிமின்னலையும் அடக்கியாளும் இராணியாய் இருக்கிறேன். உலக ஆபாசமான இச்சைகளின் வழிச்சென்று அல்லற்படும் மனிதர்களுக்கெல்லாம் மேற்பட்டவளாகவிருக்கிறேன். ஆம்; கன்னிகைகளே! உங்கள் மனதைத் தன் வயப்படுத்தி உங்களை யாட்டிவைக்கும் பாசங்களெல்லாம் என்மனதில் உணர்ச்சிபெறா. நான் இத்தகைய இன்பங்களை யெல்லாம் அடியோடு தத்தம் செய்தவள். இதனால் என் கூட்டத்தா ரெல்லாம் என்னைத் தங்களோடு சேராத ஒருத்தியாய்க் கருதிவிட்டார்கள்." என்றாள்.

அவள் அவ்வாறு கூறிக்கொண்டிருக்கையில் அங்கிருந்த தீபம் சீக்கிரம் அணையப் போவதுபோல் படபடத்தது. அப்போது நாகம்மாள் "இப்போது இன்னும் பேசவேண்டாம். அவன் வருகிறான்! அவன் வருகிறான்! இப்போது நீங்கள் இதுவரையில் என்னைப்பற்றி யறிந்து

கொண்டது போதும். இதனால் நான் உங்களுக்குப் புத்தி மதி கூறவும் உங்களைக் கண்டிக்கவும் எனக்குச் சுதந்தரம் இருக்கிறதென்று நீங்கள் தெரிந்து கொள்ளலாம். ஓ பேயே! ஆவேசமே! உனக்குத் தைரியமிருந்தால் நெருங்கிவா பார்ப்போம்." என்று இவ்வாறு கூறியதும் நாகம்மாள் அங்கிருந்த தீபத்தை யணைத்துவிட்டுக் கம்பீரமான நடையாய் அந்த அறையைவிட்டுப் புறப்பட்டாள்.

மீனாள் நாகம்மாளைப் பற்றிய சங்கதிகளைத் தன் தந்தையிடமிருந்தும் அன்னியரிடமிருந்தும் முன்னமே கேட்டிருக்கிறாள். ஆனால் அச்சரித்திரம் பூரணமானதல்ல. இடையிடையில் சங்கதிகள் விட்டுவிட்டிருந்தன. இப்போது நாகம்மாள் கூறிய சங்கதிகளால் இதுகாறும் அவர்களுக்குத் தெரியாத பல விஷயங்கள் தெரியவந்தன. அச்சரித்திரத்தைக் கேட்டதே அவள் மிக்க வியப்பும் பீதியும் அடைந்தாள். அதனால் அவள் சற்றுநேரம் தன் தங்கையிடம்கூட ஒரு வார்த்தையும் பேசவில்லை.

---

## 28-வது அத்தியாயம்.

தன் தங்கையிடம் சற்று நேரம் பேசாமலிருந்த மீனாள் கடைசியில், "புனிதம்! புனிதம்!" என்று அழைத்தாள். புனிதம் பேசவில்லை. மீனாள் எழுந்துபோய் அவளைத் தட்டினாள். அவள் அப்போதும் பேசவில்லை. அவள்தேகம் பனிக்கட்டிபோல் சில்லென்றிருந்தது. மீனாள் மிக்க பீதியடைந்து உடனே சாளரங்களைத் திறந்து நல்ல காற்று தாராளமாக வரச்செய்து மறுபடி தங்கையையுற்று நோக்கியபின் அவள் மூர்ச்சையடைந் திருக்கிறாள் என்று தெரிந்து கொண்டாள். நாகம்மாள் கூறிய சரித்திரமும்,

அவளுடைய பயங்கரமான கதைகளும் யாவும் உடனே மீனுள் மனதினின்றும் மாயமாய்ப் போய் விட்டன.

தன் தங்கையின் பயங்கரமான ஸ்திதியே அவள் மனதில் மிக்க திகிலையுண்டாக்கிவிட்டது. ஆகையால் அவள், தான் செல்லவேண்டிய ப்ரதை நெருக்கமான இருண்ட நீண்ட பாதை யென்பதைக்கூடச் சற்றும் நினைக்காமல் துரிதமாய் வீட்டுக்காரியஸ்தியிருக்கும் அறைக்கு ஓடினுள்.

மூதாட்டியாகிய வீட்டுக்காரியஸ்தி இப்பெண்களைச் சிறு வயதிலிருந்து வளர்த்தவளானதால் புனிதம் மூர்ச்சையடைந்திருப்பதைக் கேட்டதே ஆவலோடு ஓடிப்போய்த் தக்க சிகிச்சைகளைச்செய்து மூர்ச்சை நீங்கும்படி செய்தாள். மூர்ச்சை யொழிந்தாலும் புனிதம் புத்தி சுயாதீனம் பெருமல் ஜன்னி யுண்டானவள்போல் அலறி வாய் பிதற்றத் தொடங்கினுள். காரியஸ்தி அத்தகைய வியாதிகளுக்குச் சிகிச்சை செய்வதில் நல்ல அனுபவமுடையவள். ஆகையால் வேறு விதமான ஔஷதங்களை யளித்துக் கடைசியில் புனிதம் நிம்மதியாய் நித்திரையடையும்படி செய்தாள். தன் தங்கை நித்திரையடைந்ததைக்கண்ட பின்பே மீனுள் மனே நிம்மதியடைந்து தானும் நித்திரை செய்ய முயன்ருள். ஆனுல் நெடுநேரம் அவளுக்கு நித்திரை பிடிக்கவில்லை. நாகம்மாள் கூறிய பயங்கரமான விஷயங்கள் அடிக்கடி அவள் மனதிற்கு வந்துகொண்டே யிருந்தன.

கடைசியில் சகோதரிகள் இருவரும் பொழுதுவிடிந்து நெடுநேரங்கழித்து விழித்தெழுந்தார்கள். சற்று நேரம் ஒருவருரோடொருவர் பேசாமலே யிருந்தார்கள். புனிதம் நன்ருய் நித்திரைசெய்து எழுந்ததே அவளுடைய பீதி, கலக்கம் யாவும் ஒழிந்து அவள் மனம் நிம்மதியாயிருந்தது. ஆனுல் மீனுளுடைய முகமோ சவம்போல் வெளுத்துவிட்

டிருந்தது. அவள் முகத்தில் துயரமும் கலக்கமும் நிறைந்திருந்தன. அவர்கள் இருவரும் தேகசுத்தி செய்துகொண்டு உடையணிந்துகொள்ளும்போதுதான் புனிதம் தன் தமக்கையின் முகத்தை நன்றாக நோக்கினாள். நிலைக்கண்ணாடியில் அவள் முகத்தை நன்றாக நோக்கியதும் அவள் மனந் தாளாது தன் தமக்கைக்கு முத்தமளித்து மிக்க அன்போடு, "அக்கா! அந்தப் பைரவி கிருஷ்ணப்பன் எனக்குப் பகல் என்றும் உனக்கு இரவு என்றும் வைத்த மாற்றுப்பெயர்கள் சரியாகவே யிருக்கின்றன" என்றாள்.

மீனாள்:—தங்காய்! ஏன் அப்படிக் கூறுகிறாய்?

புனிதம்:—"இதோபார்! இரவு நாகம்மாள் அப்பயங்கரமான சரித்திரத்தைப் பற்றிக் கூறியபோது நான் அதைக்கேட்டுச் சகிக்க முடியாமல் சொல்லொணு வேதனை யடைந்தேன். அதை நான் வெளியிற் கூறவில்லை. ஆனால் என்மனதிலிருந்த பயங்கர வேதனை கடவுளுக்கே தெரியும். நீயோ அப்போது சற்றும் மனப்பயமாவது கலவரமாவதில்லாமல் அச்சரித்திரத்தைக் கேட்டுக்கொண் டிருந்தாய். இப்போது பகலில் நான் சற்றும் அச்சமின்றி அச்சங்கதிகளை நினைத்துக்கொண் டிருக்கிறேன். நீயோ மிக்க திகிலடைந்து முகம் வெளுத்திருக்கிறாய்." என்றாள்.

மீனாள்:—புனிதம்! அத்தகைய பயங்கரமான விஷயங்களை யிவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விடக்கூடிய மனம் இருக்கிறவரையில் நீ மிக்க அதிஷ்டசாலியே. ஏனெனில் அத்தகைய பயங்கர சங்கதியை மறப்பது மிக்க அரிதே.

புனிதம்:—அந்தோ! பீதியொருபோதும் மறக்க முடியாதது. நாகம்மாள் கூறிய கதைமுழுமையும் அவள் ஏதோ பீதியடைந்த மனதில் தானே உற்பத்தி

செய்துகொண்டாள் என்று கருதினலன்றி அவளு டைய பயங்கரமான சரித்திரத்தைக் கேட்கும் எவர்க் கும் பீதியுண்டாகாமற் போகாது.

மீனுள்:—அப்படியாயின் அவள் கூறிய குள்ளன் பாறை யென்ற பயங்கரமான விடத்தைப் பற்றிய சங்கதிகளை நீ நம்பவில்லையோ? அதைப்பற்றி நெடுநாட்களாக அனேகம் பயங்கரமான கதைகள் வழங்குகின்றன வல்லவா?. அந்த விடமே சாதாரண மனிதரால் அமைக்கப்பட்டதல்லவென்றும் பூதங்களால் அமைக் கப்பட்ட தென்றும் நெடுநாட்களாகக் கூறப்பட்டு வருகின்றது. அங்கேயே யப்பூதம் வசிப்பதாகக் கரு தியே யாவரும் அங்குசெல்ல அஞ்சுகிருர்கள்.

புனிதம்:—நமது பரிதாபமான சுற்றத்தாள் அப்படிப் பொய் கூறுகிறவளல்ல. ஆகையால் அவள் அக்குள் ளன் பாறைக்கு ஒரு சமயத்தில் பெரும்பாலும் புயற் காற்றடிக்கையில் அங்கு அடைக்கலம் புகுந்திருப் பாள். பெரும்பாலும் அங்கு நித்திரைபோய் விட்டி ருப்பாள். அச்சமயத்தில் தான் கேட்டிருந்த ஐதீகப் படியே ஏதோ கனவுகண் டிருப்பாள். அவ்வளவே யன்றி, நான் சுலபத்தில் அதிகமாய் நம்பக்கூடவில்லை.

மீனுள்:—ஆயினும், அச்சங்கதி அவள் கூறியவற்றிற்கு ஒத் தாற்போ லிருக்கிறதே.

புனிதம்:—அக்காள்! நீ என்னை மன்னிக்கவேண்டும். அச் சங்கதி யப்படி நடந்திரா விட்டால் அக்கனவுக்கு ஒரு அர்த்தம் ஏற்பட்டே யிராது. தன் தந்தை யின் மரணம் நேர்ந்தவரையில் தான் அதை மறந்து விட்டதாக அவளே கூறினள். அவள் தந்தையின் மரணம் பயங்கரமான மரணமே. அவள் அப்போது கண்ட கனவாய்க் கூறியது அவளே

நினைந்து கொண்ட மனோபாவமல்லவென்று எப்படிக் கூற முடியும்? அவள் உண்மையாகவே அக்குள்ளப் பூதத்தைக் கண்டுபேசியது உண்மையாயின் அதன் சம்பாஷணையைக் கியாபகத்தில் வைத்திருக்கவேண்டு மல்லவா? என்போன்றவளாகவிருந்தால் மனதில் வைத்தேயிருப்பேன்.

மீனாள்:—புனிதம்! ஒருநாள் புதுக்கோயிலருகில் ஒரு குரு பிரசங்கம் செய்தது கவனமிருக்கிறதா? அவர் பின் வருமாறு கூறினார்:—

"மனிதர் தங்கள் சிற்றறிவிற் கெட்டாததை நம்புவதில்லை. அது மனிதரிடமுள்ள ஒரு பெரிய முட்டாள் தனம். விஷயங்கள் நமது சிற்றறிவிற்கு எட்டாதவைகளாக விருந்தால் நமது மனம் அதை நம்ப மறுக்கிறது. இது மனித சுபாவமே. இது நெடுங்கால பிரத்தியட்ச அனுபவம். முற்காலத்தில்கூட சாதாரண மனிதரின் சாமான்ய அறிவைக்காட்டிலும் விசேஷ அறிவுடையோர் கூறிய சங்கதிகளை அக்காலத்திய மனிதர் நம்பக் கூடாத அவ்வளவு அதிசயமான சங்கதிகளாகவே கருதி அவர்களை நம்பத்தகாதவர்களென்று அவமதிப்பும் செய்திருக்கிறார்கள். பிற்காலத்தில் மனிதரின் அறிவு விசாலித்த போது அவை நாம் அறியக்கூடிய வுண்மைகளே யென்று உணர்ந்து அந்த மேதாவிகளை அவர்கள் மரித்தபின் புகழ்ந்து கொண்டாடினார்களென்று நாம் சரித்திரங்களால் அறிந்திருக்கிறோம்."

புனிதம்:—அக்கா! நீ யுன் வரையில் அதிகமாய் வாசித்திருக்கிறாயானதால் அக்குருவின் உதவி யுனக்குவேண்டியதில்லை. அவர் கூறியவையாவும் நமது மதவிஷயமான சங்கதிகளைப் பற்றியே. அவற்றைப்பற்றி நாம் நமது ஆலோசனைப்படி செல்லாமல் யாவற்றையும்

சத்திய வாக்காகவே நம்பிக்கொள்ளவேண்டுமென்பதே. நாம் சாதாரண மனிதர்களைப்பற்றிய விஷயங்களிலும் அந்த நியாயத்தை யுபயோகிப்பது தகாது. மதவிஷயங்களை நாம் நமது புத்தியின் ஆராய்ச்சியை யுபயோகிக்காமல் அப்படியே யொப்புக்கொள்ள வேண்டியது சரியே. ஆனால் இத்தகைய விஷயங்களில் கடவுள் நமக்கு அறிவை - பகுத்தறிவை யளித்திருக்க நாம் அப்படி நம்பிவிடலாகாது. நீ என்னைவிட நம்பிக்கையான மனமுடையவள். இத்தகைய கதைகளை யெல்லாம் உண்மையாகவே நம்பிக்கொள்கிறாய். ஏனெனில் இத்தகைய மாந்திரீகர், குறி சொல்வோர் முதலியவர்களிடம் உனக்கு இயற்கையாகவே அன்பிருப்பதால் அவர்கள் கூறும் அபூர்வ சங்கதிகளில் உனக்கு நம்பிக்கை யுண்டாய்விடுகிறது. அவர்கள் கூறும் கடற் கன்னிகைகள் தங்கள் அதிசய உருவத்தோடும் பறக்கும் இறகுகளோடும் உன் சிநேகிகளாக வருவதாயின் மிக்க ஆனந்தத்தோடு ஏற்றுக்கொள்வாய். அத்தகைய அசம்பாவிதமான சங்கதிகளை யுன் மனம் சந்தோஷத்தோடு சுலபமாக நம்பிக்கொள்கிறது.

மீனாள்:—சரி, சரி; இச்சம்பாஷணை போதும்.

புனிதம்:—நீ யேன் பெருமூச்சு விடுகிறாயே?

மீனாள்:—நமது பரிதாபமான சுற்றத்தாளாகிய நாகம்மாளின் துர் அதிட்டத்திற்காக நீ இவ்வளவு சுலபமாக அவளை யேளனம் செய்துவிடுவதைப்பற்றி நினைத்த போது எனக்கு மூச்சு திணறியது.

புனிதம்:—“நான் கடவுளறியக் கூறுகிறேன். நான் அவளை ஏளனம் செய்யவில்லை. நான் உண்மையாகவும் பட்சத்தோடும் கூறுகிறவற்றை யெல்லாம் நீயே குரூரமாகவும் கொடியவை யாகவும் மாற்றிவிடுகிறாய். நாகம்

மாள் மிக்க அபூர்வமான சக்தியுடையவ ளென்றும், ஆனல் இடையிடையில் அவள் செய்கைகளில் பைத்தியக்காரத்தனம் கலந்து விடுகிறதென்றும் நான் கருதுகிறேன். அதோடு வானத்தின் குறிகளைப்பற்றி இங்குள்ள மற்ற எல்லா மாதரையும் விட அவள் அதிகமா யறிந்திருக்கிருள் என்றும் கருதுகிறேன். ஆனல் அவள் பஞ்சபூதங்களை யாளும் வல்லமையுடையவ ளென்பதை நான் நம்பவில்லை," என்று சற்று கோபத்தோடு மொழிந்தாள்.

தன் தங்கை பிடிவாதமாய் நாகம்மாள் விஷயத்தில் அவநம்பிக்கை கொண்டதை யறிந்த மீனுள் மனவருத்த மடைந்தாள். ஆகையால் ஆத்திரத்தோடு அவளைநோக்கி,

"புனிதம்! இருக்கட்டும், இம்மாது, அரைப்பைத்தியம் பிடித்தவள் - பொய்க்கதைகளைக் கூறுபவள். இத்தகைய மனுஷியிடந்தானே நீ யுன் இருதய சம்பந்தமான விஷயத்தைப் பற்றி யாலோசனை கேட்கக் கருதினுய்?" என்றுள்.

புனிதம் மிக்க கலக்க மடைந்தவளாய், "நீ கூறுவதன் அர்த்தம் இன்னதென்று எனக்கு விளங்கவில்லை" என்று கூறிக்கொண்டு அவளிட மிருந்து போய்விட முயன்றுள். ஆனல் முடியவில்லை. ஏனெனில் சகோதரிகள் ஒருவருக்கொருவர் உடைதரித்துக்கொண் டிருக்கையில்தான் இச்சம்பாஷணை நடந்தது. இப்போது மீனுள் புனிதத்தின் உடையைப் பின்பக்கம் கட்டிக்கொண் டிருக்கிருள். ஆகையால் மீனுள் அவளைப் போகவிடாமல் பிடித்துக்கொண்டு,

"ஓ புனிதம்! அந்த அன்னியனுகிய முருகப்பன் நம்மை நடத்தியிருக்கும் மாதிரிக்கு, யாருடைய வாக்குறுதி தன்னை ஏற்றுக்கொள்ளப் பிரியமில்லாத விடத்திற்கு அவனை வலிய வரும்படி செய்ததென்பதும், நீ யின்னும்

அவனைப்பற்றிப் பிரியமான விதமாகவே கருதுவதும் மிக்க அதிசயமல்லவா? உன் நடக்கையே நாட்டில் வசியமந்திரங்களிருக்கின்றன வென்பதற்கும் நீயவற்றால் மயக்கப்பட்டிருக்கிறா யென்பதற்கும் அத்தாட்சி யல்லவோ. முருகப்பன் வீணாகவா தன்கழுத்தில் பஞ்சலோகச் சங்கிலி யணிந்துகொண் டிருக்கிறான்?'' என்றாள்.

புனிதம் துரிதமாய் எனக்கு முருகப்பனோடு எவ்விதச் சம்பந்தமுமில்லை. அவனாவது வேறெந்த வாலிபனாவது கழுத்தில் என்ன அணிந்துகொண் டிருக்கிறார்களென்பதைப்பற்றியும் எனக்கு அக்கரையில்லை. இப்படி ஆயிரம் பேர் சங்கிலி யணிந்திருப்போரை நான் கண்டாலும் ஒருவனால்கூட நான் மயங்கிவிட மாட்டேன்'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டுப் பிறகு சாந்தமாய், "தமக்கையே! முருகப்பன் நம்மிடம் நெருங்கிய உண்மையான நண்பனாய் இருந்தவன். அப்படிப் பட்டவன்மேல் நீயும் இன்னும் மற்றவர்களும் இப்போது கொண்டிருக்கும் மாறான அபிப்பிராயம் அடியோடு தவறானதே என்று நான் கருதுகிறேன். இப்படிக் கூறுவதால், முருகப்பன் உனக்கெப்படியோ எனக்கும் அவ்வளவே யன்றி எள்ளளவுகூட அதிகமென்று கருதாதே. நம்மிருவரில் எவரையேனும் தான் மணம்புரியலாகு மென்றும், ஆனால் யாருக்கு இம்மாளிகை சேர்கிற தென்பதைத் தெரிந்து கொள்ளுமட்டும் தான் காத்திருப்பதாகவும் அவன் கூறினானென்பது பொய். அவன் ஒருபோதும் அப்படிக் கூறுகிறவனல்ல. எங்கோவிருந்து புதிதாய் வந்த ஒரு கப்பலோட்டியின் பேச்சையும், கள்ளனல்லவென்றும் பொய்யனல்ல வென்றும் நாம் கூறொணாத ஒரு ஹாக்கரின் பேச்சையும் கேட்டுக்கொண்டு பழைய நண்பனை நீ ஒட்டிவிட்டது சற்றும் நியாயமென்று எனக்குப் புலப்படவில்லை'' என்றாள்.

மீனுள்:—புனிதம்! குலசேகரன் இவனைப்பற்றி யொரு அவதூறான வார்த்தையும் கூறவில்லை. அவன் ஒருவர் மேலும் அப்படிக் கூறுகிறவனல்ல. நான் அவன் பேச்சையேனும் ஹாக்கர் சுந்தரம் பிள்ளையின் பேச்சையேனும் கேட்டுக்கொண்டு நடக்கவில்லை. ஊர் முழுமையும் அவ்வாறு வதந்தியாக விருக்கிறதென்றும், பலபேர் அப்படிக் கூறுகிறார்களென்றுமே அவர்கள் மொழிந்தார்களன்றித் தாங்கள்கேட்டதாக அவர்கள் கூறவில்லை. ஊரில் நம்மைப்பற்றி அத்தகைய வதந்தி உலவுவது நமக்கு எவ்வளவு மானக்கேடான விஷயம்!

புனிதம்:—ஊரார் மூடத்தனமாய் உளறுவார்கள். அவர்களே யொன்றை யுத்தேசித்துக்கொண்டு பொறாமையாலோ வேறெக்காரணத்தாலோ ஒன்றை யுளறினால் அதற்காக நாம் நமது பழைய நண்பனை விரோதம் செய்துகொள்வது எங்கேனும் நியாயமாகுமோ? அவன் நம் இருவரையும் சமமான இரண்டு சகோதரிகளாகவே பாவித்திருந்தானென்பது உனக்கு நன்றாகத் தெரியும். அவன் நம்மில் ஒருவரை மணம்புரியலாமென்று ஒருபோதும் கருதியதாகத் தெரியவில்லை.

மீனுள்:—"ஒருசமயம் அவன் இதுகாறும் ஒருவரைப்பற்றித் தீர்மானம் கொண்டு விட்டான் என்ற சங்கதி உனக்குத் தெரிந்திருக்கிறதுபோலும்," என்றாள்.

அம்மொழிகளைக் கேட்டதே புனிதம் மனம் கொதித்துவிட்டது. அவள் தன் தமக்கையின் கரங்களிலிருந்து திமிறிக்கொண்டு அவள் எதிரில் திரும்பி நின்றாள். அவள் முகம் சிவந்துவிட்டது; உதடுகள் துடித்தன; கண்கள் சிவந்து விட்டன; அவள் மார்பு விம்மியது; அவள் உடையின் மேல்பாகம் நழுவிவிழுந்தது. அவள் இரண்டு கன்னங்

களிலும் இரத்தம் ஏறியதால் அவை சிவந்துவிட்டன. அவள் ஆத்திரத்தோடு தன் தமக்கையை நோக்கி, "அக்கா! இதைக்கேட்டு என்னால் சமாளிக்க, பொறுக்க முடியாது-உன்னிடமிருந்து கேட்டும் பொறுக்க முடியாது. நான் இதைச் சகிக்கமாட்டேன். என் ஆயுள் முழுமையும் நான் உண்மையையே பேசினேனென்றும், நான் எப்போதும் உண்மையையே விரும்புகிறவளென்றும் உனக்கே நன்றாகத்தெரியும். நான் கூறுகிறேன், முருகப்பன் இதுவரையில் நம்மிருவரில் வித்தியாசம் கருதியதில்லை என்று...." என்றதே.

மீனாள்:—"ஆ! ஆ! இப்போது கருதுகிறான் என்று தெரிகிறது. அந்த உண்மை யுன் வாயினின்றும் வெளிவரத்தடுமாறுகிறது" என்றாள்.

புனிதம் உறுதியாய் "நான் எப்போதும் உண்மையையே கூறுவேன். நீ கூட அதைப்பற்றித் தவறாக அர்த்தம் செய்துகொண்டாலும் சரி. நீ அவனுடைய நட்பைத் தக்க காரணமின்றி அநீதமாய் அலட்சியம் செய்து விட்டவரையில் அவனுக் குன்மேலிருந்த நட்பு குன்றவேண்டியது இயல்பேயன்றோ" என்றாள்.

மீனாள்:—"அது அவ்வாறாகவே யிருக்கட்டும் நட்பிலாயினும் சரி, காதலிலாயினும் சரி, உனக்கு என்போட்டியிராது. ஆயினும் நீ இதைப்பற்றி ஜாக்கிரதையாக விரு. நம் கிராமத்தி லுள்ளவர்களில் எத்தனைபேர் அதைப்பற்றிக் கூறுகிறார்கள் தெரியுமா? அவர்களில் நம் நண்பர்கள் கூறுவதைக் கவனிக்க வேண்டாமோ?" என்றாள்.

புனிதம்:—ஆமாம்; நடந்த விருந்தில் நீ யுன் கேளிக்கையிலிருந்து விட்டாய். எவர்கள்—எந்த உன் நண்பர்கள் முருகப்பனைப்பற்றி அவதூறு கூறினார்களோ, அவர்

186517

களே மிக்கஅன்போடும் சந்தோஷத்தோடும் விருந்து நடக்கும்போது அவனை யாவலோடு தங்கள் மத்தியில் உட்காரவைத்துக் கொண்டார்கள். என்பதை நீ கவனிக்கவில்லை. நீ யவர்கள் சம்பாஷணையையும் கேட்கவில்லை. உன் செவிகள் வேறு சந்தோஷ சமாசாரங்களைக் கேட்டுக்கொண் டிருந்தன" என்றாள்.

---

## 29-வது அத்தியாயம்.

மீனாள், "ஆயினும் உன் பார்வைகள் ஒரு நாட்டமுமின்றி யிருந்தனவாக்கும். ஏனெனில் நீ தவிர மற்ற ஊராரெல்லாம் நம்மைப்பற்றி இழிவாகப்பேசினான் என்ற வாலிபன்மேல் உன் பார்வை சென்றிருந்தது. அவன் நிரபராதியாயினும் உன் செய்கை ஊரார் வதந்தியை நிச்சயப்படுத்துகிறதென்று இராமாபாய் கூறுகிறாள்" என்றாள்.

இந்த இராமாபாயின் சகோதரி புத்திரிகளாகிய மரகதம் கல்யாணி என்ற இருவர் மத்தியில் தான் முருகப்பன் விருந்தின்போது உட்கார்ந்திருந்தான் என்று நாம் முன் கூறினோம்.

புனிதம் பின்னும் தீக்ஷண்யமடைந்து "நான் எனக்குப் பிரியமான திக்கில் நோக்குவேன். அந்த இராமாபாய் என் எண்ணத்தையாவது, கண்களையாவது, வார்த்தைகளையாவது அதிகாரம் செய்ய முடியாது. நான் முருகப்பனை நிரபராதி யென்றே நம்புகிறேன். அப்படியே யவனை நோக்குவேன். அவனைப்பற்றி யவ்வாறே பேசுவேன். மனச்சாட்சியின்படி வாக்காலும் செய்கையாலும் நடப்பவர்கள் ஒருபோதும் ஒருவர்க்கும் அஞ்சார்கள் என்பதை நீ உறுதியாக மனதில் வை. அவர்களுக்குக் கடவுளே

சாட்சியாயிருப்பதால் அவர்கள் அஞ்சவேண்டிய அவசியமேயில்லை. நான் அவனோடு பேசாததும், முன்போல் அவனிடம் நடந்துகொள்ளாததும் என் தந்தையின் கட்டளைக்கு மீறி நடக்கலாகாதென்ற ஒரு நியாயத்திற்கேயன்றி, இந்த இராமாபாய்க்காவது இத்தகைய இருபது இராமாபாய்களுக்காவது இவள் பெண்களின் கண்ணடிகளுக்காவது பயந்தல்ல'' என்றாள்.

மீனாள் சாந்தமாகவே, "புனிதம்! நீ அவன் பக்கத்தில் பேசும் சிபாரிசு சாதாரணமானதல்ல. நாகம்மாளுடைய வாழ்க்கையின் சுகத்தை யடியோ டழித்துவிட்டவன் ஒரு அறிமுகமல்லாத புது மனிதனே யென்றும், அவள் தன் குடும்பத்தார் அபிப்பிராயத்திற்கு மாறாக நடந்தாளென்பதையும் மனதில் வைத்து ஜாக்கிரதையாய் நடந்துகொள்'' என்றாள்.

புனிதம் உறுதியான மொழிகளால் "ஆம்; அவன் அன்னியனே—பிறப்பால் மட்டுமல்ல நடையுடை பாவனையாலும் கூட அன்னியனே. அவள் சிறு வயதுமுதல் அவனோடு கூடி வளரவில்லை. சில வருடங்களேனும் அவனோடு பழகி அவள் அவனுடைய குணம் நடக்கை முதலியவைகளைப்பற்றிச் சற்றும் அறிந்துகொள்ளவில்லை. அவன் யாரோ நாடோடிப்பயல், பெரும்பாலும் புயற்காற்றாலுண்டான கப்பற்சேதம் முதலிய ஏதேனும் அசந்தர்ப்பமே யவனை யித்தீவில் கொண்டு வந்து சேர்த்திருக்கும். அவன் தன் உள்ளே யுள்ள வஞ்சகமனைத்தும் வெளி வேடத்தால் மறைத்துக் காட்டுவதில் கெட்டிக்காரனாக விருந்திருப்பான். என் அன்பார்ந்த தமக்கையே! உன் எச்சரிக்கை என் வரையில் சுத்த அனாவசியம். ஆனால் அது உனக்கே இச்சமயம் முக்கிய அவசியமானது. இந்த விடத்தில் முருகப்பனைவிட வேறு புது ஆசாமிகளிருக்கிறார்கள். நீ கூறு

வதைப்போல் அவர்களைப்பற்றி ஜாக்கிரதையாயிருப்பது அவசியமே'' என்றாள்.

தான் வெளியிட்ட சந்தேகத்தையும் எச்சரிக்கையை யும் பற்றித் தன் தங்கை மறுத்துக் கூறியதைக் கேட்டதே, மீனாள் சற்றுநேரம் பிரமையடைந்து ஒன்றும் தோன்றாத வளாகவிருந்தாள். ஆனால் அவளுடைய இயற்கையான பெருமைக்குணம் உடனே அதற்குப்பதிலளிக்கும் சக்தியை யளித்து விட்டது, பெருமை யுடையவர்கள் எப்போதும் தங்கள் மனச்சாட்சியை யடக்கிக்கொண்டு தங்கள் நடக் கையே சரியானது என்று வாதாடுவது சுபாவம். அவ் வாறே மீனாளும் தன் தங்கையை நோக்கி,

"புனிதம்! நீ எப்படி என்னிடம் மனம் விட்டு நம் பிக்கையாய்க் கூறினாயோ அவ்வாறே நானும் கூறுகிறேன். என் மதிப்பில் குலசேகரன், உனக்கு முருகப்பன் எப்படி யோ அப்படித்தான். எள்ளளவும் எந்த விஷயத்திலும் அதிகமில்லை. ஆயினும் என் மனோபாவத்தை மறைத்து உன்னை வஞ்சிக்கவாவது, என் எண்ணத்தை வேறுவித மாகக் கூற வாவது எனக்குப் பிரியமில்லை. ஆகையால் என் உண்மையைக் கூறுகிறேன். நான் குலசேகரன்மேல் காதல் கொண்டிருக்கிறேன்'' என்றாள்.

அவள் கடைசியில் கூறிய மொழிகளைக் கேட்டதே புனிதம் தன் கோபம் முழுதும் அடியோடடக்கிக்கொண்டு, தன் வார்த்தைகளின் கண்டிப்பையும் நீக்கி விட்டுத் தன் கரங்களை யவள் கழுத்திற்போட்டு ஆலிங்கனம் செய்து கொண்டு மிக்க அன்பும் இரக்கமுமான மாதிரியாய்,

"ஓ! அக்கா! அப்படிக்கூற வேண்டாம். நான் உன்னை வேண்டிக் கொள்கிறேன். அவ்வாறு கூறவேண் டாம். நான், வேண்டுமாயின் முருகப்பனை யடியோடு நினைப்பதில்லை. நான் மறுபடி யவனோடு வார்த்தையாடு

வதேயில்லையென்று சத்தியம் செய்கிறேன். ஆனால் நீ அக்குலசேகரனைக் காதலிப்பதாய் மட்டும் மறுபடி கூறாதே" என்றாள்.

மீனாள் தன் தங்கையின் ஆலிங்கனத்திலிருந்து விடுவித்துக்கொண்டு, "நான் ஏன் மறுபடி யப்படிக்கூறலாகாது? அந்த எண்ணம் எனக்குச் சந்தோஷத்தை யளிக்கிறது. அவனுடைய தைரியமும், உற்சாகத்தின் வல்லமையும், அவனுடைய நடக்கைகளுக்கு இயற்கையாகிய அதிகாரதோரணையும், அவனுடைய பயமறியாத்தன்மையும் என் க்ஷேமத்தைப்பற்றி யுனக்குப் பீதியையுண்டாக்குகின்றன. ஆனால் அக்குணங்கள் உண்மையில் என் க்ஷேமத்திற்குப் பாதுகாப்பானவைகளே. புனிதம்! உன் பாதங்கள் வசந்த காலத்தில் மிருதுவான கடற்கரையில் உலவப் பிரியப்படும்போது என் கால்கள் கடலலைகள் மும்முரமாக வீசிக்கொண்டிருக்கும் பாறைகளின் உச்சியில் நடக்கப் பிரியமுடையனவாயிருக்கின்றன" என்பதை கவனத்தில் வை" என்றாள்.

புனிதம்:—"ஓ அக்காள்! அதற்காகவே நான் இப்போது பயப்படுவது. அந்தத் துணிகரமான நடக்கையே யுன்னை நீ கூறிய பயங்கரமான அலைகள் மோதும் பாறையினும் பயங்கரமான பாறைக்கு உன்னை யிழுத்துச் செல்கிறது. அதற்காகவே நான் மிகவும் பயப்படுகிறேன். இம்மனிதன்— என்மேல் கோபிக்கவேண்டாம். நான் அவனைப்பற்றி அவதூறாக ஒன்றும் கூறவில்லை—உன் அபிப்பிராயப்படிக்கே கடினகுணமும் அகங்காரமுமுடையனனல்லவா? தான் யாரைப் பின் தொடர்ந்து நடக்க வேண்டுமோ அத்தகையோரையும் தான் அதிகாரியாகவிருந்து நடத்த

வேண்டுமென்ற மமதையுடையவன், தனக்கு அதிகாரம் செலுத்தவேண்டிய சுதந்தரமில்லாத விடத்தில் அதிகாரம் செலுத்தும் அகங்காரமுடையவன், ஒரு நன்மையான முடிவைக் கோராமல் அபாயத்தில் நுழையவேண்டுமென்ற ஆவலுக்காகவே அபாயத்தை யுண்டாக்கும் காரியங்களில் பிரவேசிக்க ஆவலுடையவன், அத்தகைய நிலைமையற்ற சாந்தமற்ற பொங்கும் மனமுடையவனேடேயா நீ யுன் வாழ் நாளைக் கழிக்க விரும்புகிறாய்? இவன் காலமனைத்தும் பயங்கரமான கடல் யுத்தங்களிலேயே கழிக்கப்பட்டிருக்கிறது. இவன் மாதரிடம் சம்பாஷிக்கும்போதுகூட அத்தகைய அபாயமான காரியங்களில் தலையிட மிக்க ஆவலுள்ளவன் என்பதை மறைக்காமலே கூறுகிறான். ஒரு காதலன் தன் காதலியைத் தன் உயிரினும் உயர்ந்தவளாகக் கருதவேண்டும். இவனே தான் இன்னொருவரைக் கொல்லும் பெருமையை யாவற்றினும் சிறந்ததாகக் கருதுகிறான். கடவுளே அத்தகைய மனிதனுக்கு வாழ்க்கைப்படும் ஒரு மாதின் காலம் என்ன விதமாகக் கழியும் என்பதை நீயே சிந்தித்துப் பார்'' என்றாள்.

மீனாளோ அறிவாளியாகிய தன் தங்கை குலசேகரன் நடக்கைகளைப்பற்றி இழிவாய்க் கூறியவற்றையெல்லாம் தான் உயர்வாகவே கருதியவள் போல்,

“புனிதம் அதற்காகவே, அக்குணங்களுக்காகவே நான் அவனைக் காதலிக்கிறேன். வடநாட்டு மாதர்கள் தங்கள் கணவர்களையும் புத்திரர்களையும் சந்தோஷத்தோடு யுத்தத்திற்கு அனுப்புகிறவர்கள். அவர்கள் புறமுதுகிட்டு ஓடிவந்து விட்டால் தங்கள் கரத்தாலேயே அவர்களைக் கொன்றுவிடும் வீரமாதர்கள். நான் அத்தகைய வமிசத்தில்

பிறந்தவள். இப்போது எத்தகைய செய்கைகளால் தாழ்ந்த நிலையடைந்த நம்மவர் கௌரவமடையக் கருது கிறார்களோ அத்தகையவற்றை வெறுப்பவனே எனக்குக் காதலனாக வரவேண்டும். என் காதலன் ஒரு கடலரசனாக விருக்கவேண்டும், அல்லது அந்த அந்தஸ்திற்குத் தற் காலத்தவர் என்னபெயர் கூறுகிறார்களோ அந்த அந்தஸ் துடையவனாகவிருக்கவேண்டும். அத்தகைய காதலனையே நான் விரும்புவேன். அதுவே எனக்குத் தகுதி'' என்றாள்.

புனிதம்:—அய்யோ! இப்போதுதான் நான் மாந்திரீகம், வசியம் என்கிறவற்றை நம்பவேண்டியதாகவிருக் கிறது. சில நாட்களுக்குமுன் என்னிடமிருந்த ஒரு தென்னாட்டுக் கதைப் புத்தகத்தை நீ யெடுத்துக் கொண்டாயே-அது உனக்கு நினைவிருக்கிறதா? என் எடுத்துக்கொண்டாய் எனில் நீ அதன் வீரத்தன் மையை யதிகமாகப் புகழ்ந்தபோது அக்கதையின் நாயகனாகிய வீரனைவிட உனக்கு அதிக வீரத்தன்மை யிருக்கிறதென்று நான் கூறியதால் நீ யப் புத்தகத்தை யெடுத்துக்கொண்டாய். ஆ! இப்போது உன் முகத் தில் உண்டாயிருக்கும் குறியால் உன் மனச்சாட்சி யுன்னைக் கண்டிக்கிறதென்றும் அப்புத்தகம் உனக்கு நன்றாக நினைவிருக்கிறதென்றும் தெரிகிறது. ஒரு சாதாரணக் கப்பலோட்டியை ஒரு கடலரசனாக எண் ணிக் கொள்வதும் புத்திசாலிக் கழகாகுமோ?'' என்றாள்.

தன் தங்கை மொழிகளனைத்தும் கேட்ட மீனாள் மிக்க கோபமடைந்தாள். அவள் முகம் சிவந்து விட்டது. ஆனால் அதே சமயம் தன் தங்கை கூறும் விஷயங்களிலுள்ள உண்மையும் ஒருவாறு அவள் புத்திக்குப் புலப்பட்டன. அவள் தன் தங்கையை நோக்கி, "என்னைக் கண்டித்துக்

கூற உனக்கு அதிகாரமிருக்கிறது. ஏனெனில் என் இரகசியம் உன்னிடம் சிக்கிக்கொண் டிருக்கிறது'' என்றாள்.

புனிதம்:—அக்கா! நீ யவ்வாறு கருதுவதற்காக நான் மிக்க விசனப்படுகிறேன். உன் இரகசியம் என்னிடம் சிக்கி விட்டதற்காகவல்ல நான் அப்படிக் கூறுவது. எனக்குச் சம்பந்தமில்லாத வேறு யாரேனும் இத்தகைய இரகசியத்தை யென்னிடம் கூறியிருப்பார்களேயாயின் நான் அவர்களுக்கு ஒரு விடையுமளித்தேயிரேன். ஆனால் அவர்கள் இரகசியமட்டும் ஆழ்ந்த கிணற்றில் எறியப்பட்ட சிறு கல்போல என் மனதின் ஆழத்தில் மறைந்து கிடக்கும். நீ என் கூடப் பிறந்தவள். நீ யொரு காரியத்தைச் செய்யக் கருதுவதாக நான் அறிந்தபோது, தப்பாகவோ சரியாகவோ அதனால் உனக்குத் தீங்கே நேரிடும் என்று என் மனதிற்குப் புலப்படுமோயின் அதைத் தடுக்க முயலவேண்டியதும் உனக்கு எச்சரிக்கை செய்யவேண்டியதும் என் கடமையன்றோ? கடமை மட்டுமேயல்ல. அப்படிச் செய்யாதிருக்க என் மனம் எங்கேனும் உடன்படுமோ? கடமைக்காகக் கூறுபவர்கள், பிற்பாடு நீ "நான் உன்னிடம் என் சங்கதியைக் கூறினேனே. நீ எனக்கு அப்போது எச்சரிக்கை செய்திருக்கவேண்டாமா?'' என்றுகேட்டால், ஆம் அப்போதே கூறினேன் என்பதற்காக ஒரு முறை கூறிவிட்டுப் பேசாமலிருந்து விடுவார்கள். உள்ளன்புடையோர் அப்படியிருக்க மாட்டார்கள்...'' என்பதற்குள்,

மீனாள்:—"நாம் இருவருமே யிப்போது வியாகூலமான மனமுடையவர்களாக விருக்கிறோம். நாம் ஒருவரை யொருவர் பழிப்பதாலும் அன்பின்மையாலும் அதை யின்னும் அதிகப்படுத்திக் கொள்ளலாகாது. நீ என்

இரகசியத்தை யறிந்திருக்கிறாய். அது நெடுங்காலம் இப்படியே இரகசியமாகவிராது. என் சந்தர்ப்பங்கள் சரியாக வந்ததும் என் இரகசியத்தை யென் தந்தை யிடம் கூறுமலிரேன். இதற்கிடையில் ஒன்று கூறு கிறேன். என் இரகசியம் உன்னிடம் சிக்கிவிட்டது. உன் இரகசியத்தை நீ எனக்குக் கூறமறுத்தாலும் அது பெரும்பாலும் என்னிடம் சிக்கிவிட்டதென்றே நான் கருதுகிறேன்'' என்றாள்.

புனிதம்:—''என்ன நீ நினைக்கிறாய். ஒரு ஆடவன் தானே அத்தகைய அபிப்பிராயத்தைப் பகிரங்கமாகக் கூறின லன்றி நீ வெளியிட்டதுபோன்ற அபிப்பிராயத்தை நான் வெளியிடுவேன் என்று நீ கருதுகிறாயா?'' என்றாள்.

மீனாள்:—உண்மையில் அப்படிக் கருதலாகாது. ஒரு மறை வாகக் கனன்று கொண்டிருக்கும் தீ குளிர்ச்சியா லாவது, அதிக உஷ்ணத்தாலாவது தணிந்து விடலாகும்.

புனிதம்:—''ஓ! அக்கா! நீ யதையறிந்துகொண் டிருப்ப தைப்பற்றி நான் சந்தோஷ மடைகிறேன். ஆனல் நான் ஒன்றுமட்டும் கூறுகிறேன். எவனாவது என்னை மணம்புரிய விரும்புவதாய் ஐந்தாறு தடவை கேட்டா லன்றி நான் அவனைக் காதலிப்பதாய்க் கூறவேமாட் டேன். அப்போதும் எனக்கு அவன்மேல் விருப்ப மில்லை யெனின் அவன் முதல்முறை யென்னைக் கேட் கும்போது நம்மிருவர்க்கும் சம்பந்த முண்டாவது நடவாத காரியம் என்று மரியாதையாய் மொழிந்து விடுவேன் - அப்படி எனக்கும் அவன்மேல் பிரிய முண்டா யிருந்ததோ அவன் ஆவலோடு மனப்பூர்வ மாய் பன்முறை கேட்டபிறகே எனக்கு அவன்மேல்

அன்பிருக்கிற தென்பதை நான் வெளியிடுவேன். ஆனால் அத்தகைய சந்தர்ப்பம் எனக்கு இது காறும் நேரிடவில்லை.

இது இவ்வளவோ டிருக்கட்டும். நாம் இதற்காகச் சச்சரவு விளைவித்துக் கொள்ளவேண்டாம். இதைவிட நாகம்மாள் கூறியகதையைப் பற்றிக் கவனிப்போம். அவள் ஒரு புதுமனிதனால் மோசம் செய்யப் பட்டதைப்பற்றிக் கூறினாளே? அதன் அர்த்தம் என்னவென்று ஆலோசிப்போம். ஏனெனில் அவள் கூறியதில் ஏதோ ஆழ்ந்த கருத்தும் அர்த்தமும் இருக்கவேண்டும். நமது பிச்சிமலை நாகம்மாள் அர்த்தமற்ற வார்த்தைகளைப் பேசுகிறவளல்ல. மேலும் அவள் அதைக் கூறியபோது நாம் அவசியம் கவனிக்க வேண்டிய ஒரு விஷயமாகவே கருதி அதைக் கூறினாளென்றும், அதை யத்தாட்சியாகக் கொண்டு நாம் ஏதோ தாஷ்டாந்தத்தை யறியவேண்டு மென்றே கூறினாளென்றும் அவள் அதற்காக எடுத்துக் கொண்ட சிரமத்தால் நன்கு விளங்குகிற தல்லவோ? ஆகையால் அது நாம் அலட்சியமாய்க் கருதத்தக்கதல்ல'' என்றாள்.

மீனாள்:—"அவள் அதையொரு எச்சரிக்கை யாகவே கூறியிருக்கலாம். இப்போது நாம் இருக்கும் நிலைமையில், அதிலும் விசேஷமாய் என் நிலைமையில் அவசியமென்று அவளுக்குத் தோன்றி யிருக்கலாகும். நான் அதை மறுக்கவில்லை. ஆனால் நான் என் குற்றமற்ற தன்மையிலும் குலசேகரனுடைய சத்திய நெறியிலும் உறுதி யுடையவளாக விருக்கிறேன்.'' என்றாள்.

புனிதம்:—"அக்காள்! நமது நாட்டிலுள்ள ஆபாசமான ஆசாரமே நம் நாட்டுப் பெண்களில் அனேகருக்குப் பெருந் தீங்கிழைத்து, அவர்கள் வாழ்நாள் முழுமையும் சகிக்கொணாத வேதனையை யனுபவிக்கச் செய்

கிறது. அதாவது ஒரு கன்னிகையும் ஒருவாலிபனும், அவர்கள் முன்பின் அறிமுக மற்றவர்களாய், ஒருவர் குலம் கோத்திரம், குணம் முதலிய ஒன்றையும் மற்றொருவர் பரஸ்பரம் அறியாதவர்களா யிருந்தாலும், இருவரும் தாராளமாய்க் கலந்து பேசலா மென்றும், பிறகு இருவரும் விரும்பினல் அதே நிலைமையில் மணம்புரிந்து கொள்ளலாம் என்றும் ஏற்பட்டிக்கும் துர் ஆசாரமே நான் கூறுவது. இதென்ன? மிருகங்களின் சேர்க்கைக்குச் சமமாகவே யிருக்கிறது. வித்தியாச மென்னவெனில் மிருகங்கள் பெற்றோர் அபிப்பிராயத்தைக் கேட்பதே யில்லை. இவர்களோ முன்னடியாவது பின்னலாவது அவர்கள் அனுமதியைப் பெறுகிறார்கள்.

என்மேல் கோபிக்காதே. உள்ள அனுபவமான திருஷ்டாந்தத்தைப்பார். இந்தக் குலசேகரன் நல்ல கௌரவமான உயர் குடியிற் பிறந்தவனுகவும் நல்ல யோக்கியனுத்வுமே யிருக்கட்டும். ஆனல் அவன் யார்? யாருடைய புத்திரன்? உண்மையில் அவன் ஊர் எது? தொழில் என்ன? என்பன நமக்குத்தெரியா. இதுவரையில் மறுக்க முடியா உண்மை. ஒரு கப்பலின் கப்பித்தான் என்ருல், ஒரு துரைத்தன யுத்தக்கப்பல் தலைவனும் கப்பித்தானே; வர்த்தகக்கப்பலின் தலைவனும் கப்பித்தானே; ஒரு கொள்ளைக் கப்பலின் தலைவனும் கப்பித்தானே. இவற்றில் இவன் எந்தக் கப்பலின் கப்பித்தானென்று நிச்சயமாய் நாம் இன்னும் அறிந்து கொள்ள வழியில்லை. நான் இருக்கிற வெள்ளையான உண்மையைக் கூறுகிறேன். எவ்விதமான குற்றமும் கூறவில்லை. ஏனெனில் நாம் அவனைப்பற்றி எவ்வித உறுதியான நிச்சயத்தையும் அறியக்கூடாத நிலைமையிலிருக்கிறோம். உண்மையில் அவன் பெயர் குலசேகரன்

ருணு என்பதையே நாம் நிச்சயமாய்க் கூற முடியாது. ஏனெனில் அவனை யறிந்தவர்கள் இங்கொருவரு மில்லை. அவன் விஷயங்களுக்கு அவனே சாட்சியா யிருக்கிறு னன்றி வேறு சாட்சியில்லை.

நாகம்மாள் தன் மோசக்காதலனைப் பற்றி வேறு விசேஷம் ஒன்றும் கூருமற்போனது மிக்க வியப்பே. உண் மையில் அவள் இருந்த ஆபத்தான நிலைமையில் அவன் அவளைக் கைவிட்டிருப்பா னென்று நினைப்பதற் கில்லை" என்ருள்.

மீனுள் ஒரு நிமிடம் சிந்தித்து "ஏதேனும் மிக்க மன வருத்தமான சங்கதிகளிருக்கும்; அத்துயரம் மனம்சகிக்க முடியாததாக விருக்கும். அவள் காதலனு லுண்டான துயரம் அவளுக்குண்டான பயத்தால் விழுங்கப்பட் டிருக் கும்." என்ருள். புனிதம் "அல்லது அவன் நமது தந் தையின் பயத்தால் தீவைவிட் டோடிவிட் டிருப்பான்" என்ருள்.

---

## 30—வது அத்தியாயம்.

மீனுள், "பயத்தினுலோ கோழைத்தனத்தாலோ அவன் தான் காரணமாகவிருந்து அழிவினின்றும் தப்பித் துக்கொண்டு ஒடிப்போய்விட்டான். அத்தகைய சண்டா ளர்களாகிய துரோகிகளுக்குப் பகவான் என்ன தண்டனை நியமித்திருக்கிருரோ, அத்தண்டனையை யவன் முன்னமே யடைந்து விட்டிருப்பானென்றே நான் நம்புகிறேன். தங் காய்! வா நாம் செல்வோம். போஜனத்திற்காக நம்மை முன்னமே யெதிர் பார்த்துக்கொண் டிருப்பார்கள்" என்ருள்.

சகோதரிகள் இருவரும் கரங்களைக் கோத்துக் கொண்டு உடனே யங்கிருந்து புறப்பட்டார்கள். நடந்த சச்சரவால் அவர்கள் மனஸ்தாபங்கள் ஒருவாறு தணிந்து அவர்கள் மனம் ஒருவித சமாதானமும் பரஸ்பர அன்பு முடைய நிலைக்கு வந்திருந்தது. இருவரும் வீட்டை நோக்கிச் செல்லும்போது, தாங்கள் நாகம்மாளைக் கண்டதும், அவள் கூறிய சங்கதிகளும் ஒன்றையும் தங்கள் தந்தையிடம் கூறலாகாதென்றும், அவள் சரித்திரத்தைப் பற்றித் தங்களுக்கு முன்பு தெரிந்ததைவிட இப்போது அதிகமாகத் தெரிந்திருக்கிறதென்பதைக் கொஞ்சமும் அறிவிக்கலாகாதென்றும் தங்களுக்குள் தீர்மானித்துக்கொண்டு சென்றூர்கள்.

சகோதரிகளிருவரும் போஜன அறைக்குள் சென்ற போது அவர்கள் ஆலசியமாக வந்ததைப்பற்றி அவர்கள் தந்தை வேடிக்கையாகவே யவர்களைக் கண்டித்தார். அனேகர் முன்னமே காலைப் போஜனத்தை முடித்துக் கொண்டு போய் விட்டிருந்தார்கள்.

போஜனம் முடிந்ததே அங்கொரு விளையாட்டு விஷயம் நடைபெற வேண்டியதற்கு அவசியமான ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டிருந்தன. அதாவது அந்த நாட்டில் முற்காலத்தில் பிரசித்தி பெற்ற சீமான்கள், வீரர்கள். சீமாட்டிகள், கன்னிகைகள் முதலியவர்களெல்லாம் குறி கேட்பதுண்டு. அக்குறிசொல்வோர்கள், யாவராலும் மரியாதையோடும் அச்சத்தோடும் நடத்தப்படத்தக்க முதியோர்களாகவே யிருப்பார்கள். அவர்கள் எதிர்கால விஷயங்களையெல்லாம் கூறும் சக்தியுடையவர்களாக நம்பப் பட்டு வந்தார்கள்.

இப்போது கேளிக்கை நடக்கும் தம் மாளிகையில் தைரியநாதம்பிள்ளை அம்மாதிரி கேளிக்கை யொன்றை

நடத்த ஆயத்தம் செய்திருந்தார். ஆனால் அவ்வாறு குறி சொல்வோரெல்லாம் வயது முதிர்ந்த மாதர்களே. ஆகையால் தம் வீட்டுக்காரியஸ்தியாகிய மூதாட்டியே அத்தகைய வேடமணிந்து நடிக்குமாறு ஏற்பாடு செய்தார். அக்காலத்தில் குறிசொல்லும் அத்தகைய மூதாட்டிகள் எங்கேனும் குகை, அல்லது தனிக்குடிசை முதலிய இடங்களில் சன்னியாசிகளைப்போல் தனியாய் வசிப்பார்கள். ஆகையால் அம்மாளிகையின் ஒரு சாளரத்தருகில் ஒரு சிறு குடிசை அமைக்கப்பட்டது. புராதன வழக்கப்படி அக்குடிசை, மான் கரடி முதலியவற்றின் சர்மங்களால் அமைக்கப்பட்டிருந்தது. அதற்குள் ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தது. வெளியிலிருந்து குறி கேட்பவர்கள் வார்த்தைகளை மட்டும் குறி சொல்பவள் கேட்கலாமேயன்றி அவர்கள் முகத்தைக் காணலாகாது. ஆகையால் உள்ளிருப்பவளுக்குச் சத்தம் மட்டும் கேட்குமாறு ஒரு சிறு துவாரம் விடப்பட்டிருந்தது. மற்றபடி யுள்ளே யிருப்பவள் குறி கேட்பவர்களையாவது, குறிகேட்பவர்கள் உள்ளே யுள்ளவர்களையாவது காணல் முடியாது. அக்குடிசைக்குள் குறி கூறுபவளாக வேடமணிந்துள்ள வீட்டுக்காரியஸ்தியாகிய மூதாட்டி உட்காரவைக்கப்பட்டாள். அவள் அவ்வேடத்திற்குத் தக்க உடையணிந்திருந்தாள்.

குறி கேட்போரும் தாங்கள் கேட்பதை யொருவிதப் பாட்டாய்க் கூறுவார்கள். குறி கூறுபவளும் தான் பதிலுரைப்பதை யொருவிதப் பாட்டாகவே கூறுவாள். கேட்பவர்களில் அனேகர் அவ்விதப்பாட்டுத் தெரிந்தவர்களாகவே யிருப்பார்கள். அப்படித் தெரியாதவர்களாயின் தெரிந்த ஒருவரைத் துவிபாஷகராக அமைத்துக்கொள்வார்கள். இத்தகைய கேளிக்கைக் குறியில் குறி கேட்டதே யாவரும் நகைக்கவேண்டிய விஷயமே நிறைந்

திருக்கும். இச்சந்தர்ப்பத்தில் நமது பைரவி கிருஷ்ணப்பனே துவிபாஷகனாக அமர்த்தப்பட்டான். அவன் முதலில் தடுமாற்ற முற்றாலும் கடைசியில் அத்தொழிலை யேற்கொண்டான். எல்லா ஏற்பாடுகளும் உண்மையாய் நடக்கும் விவகாரம் போலவே நிறைவேறின. ஆச்சு, இனிக்குறி கேட்கும் வேலை தொடங்க வேண்டியதே. ஆனால் அச்சமயம்யாவும் தடுமாற்றமுறத்தக்க ஒரு சம்பவம் நடந்தது.

அதாவது மீனாள், புனிதம் இருவர்மட்டும் தவிர மற்ற அனைவரும் எவ்வளவோ தூரத்திலிருக்கிறாளென்று கருதப்பட்ட பிச்சிமலை நாகம்மாள் திடீலென்று அந்த அறைக்குள் வந்தாள். அவளைக்கண்டதும் அனைவரும் மரியாதையோடும் அச்சத்தோடும் விலகினார்கள். அவள் நேராக அக்குறி கூறும் குடிசையருகிற்சென்று அதன் கதவுக்குப்பதில் தொங்கிக் கொண்டிருந்த சர்மத்தைத் தூக்கி உள்ளேயிருக்கும் மூதாட்டியை "ஏ! வா வெளியில்" என்றாள்.

உள்ளேயிருந்த வீட்டுக் காரியஸ்தியாகிய மூதாட்டியாரோ அதட்டி யழைப்பதைக் கேட்டதும் அச்சத்தோடு அக்கூடாரம் அல்லது குடிசைபோன்ற விடத்திற்கு முன் பக்கம் கதவுக்குப் பதிலாகத் தொங்கிக் கொண்டிருந்த தோல் திரையை விலக்கிக்கொண்டு வெளியில் வந்தாள். வெளியில் நின்று கொண்டிருக்கும் நாகம்மாளைக் கண்டதே அவள் பயத்தால் நடுக்கமுற்று எட்டப்போய் விட்டாள். அங்கிருந்தவர்களில் பெரும்பாலார் நாகம்மாளைக் கண்டதும் பீதியே யடைந்தார்கள். ஒருவரேனும் பூரணமான நிம்மதியோடிருக்கவில்லையென்று கூறலாம்.

நாகம்மாள் அக்கூடாரத்தின் திரையை யொரு கரத்திற்பற்றிக்கொண்டு வடக்குத் திக்கை நோக்கிச் சற்று நேரம் ஏதோ முணமுணவென்று வாயாற் கூறிவிட்டு, "இனி ஒவ்வொருவராக வரிசையாய் வந்து குறி கேளுங்கள்"

என்று கூறுவதுபோல் சமிக்கைசெய்து விட்டு அத்திரைக்குள் நுழைந்து அவர்கள் திருஷ்டிக்கு மறைந்துவிட்டாள். வேடிக்கைக்காகக் குறிகேட்கவெண்ணி யிருந்தவர்களெல்லாம்பிரமையடைந்து ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தார்கள். விளையாட்டுக்குறிகேட்பதாகவிருப்பின் முன்னமே நீ முன் நான் முன் என்று ஒருவர்மேல் ஒருவர் விழுந்து கொண்டுபோ யிருப்பார்கள். இப்போது யார் முன்னே செல்வதென்று தெரியாமல் ஒவ்வொருவரும் வேறு யாரேனும் முன்செல்லட்டு மென்று பின்னிடைந்து நின்றார்கள். இக்குறி அவர்கள் எண்ணியிருந்த குறிக்கு வேறுவிதமாகவிருந்தது. அதிலும் இந்த நாகம்மாளின் விஷயம் அனைவர்க்கும் தெரியும். அவள் உண்மையாகவே குறிசொல்பவள். அப்படிப் பட்டவளிடம் யாருக்குத்தான் குறி கேட்கத் தக்க தைரியமுண்டு. ஆகையால் ஒருவரோடொருவர் குசுகுசுவென்று பேசிக்கொண்டு யாவரும் திகைத்து நின்றார்கள்.

கடைசியில் வீட்டின் முதலாளியாகிய தைரிய நாதம் பிள்ளை முன்வந்து அனைவரையும் நோக்கி, "ஏன் விளையாட்டு நடக்காமல் ஆலசியப்பட் டிருக்கிறது? என் என் சுற்றத்தாள் அந்த இடத்திற்கு வந்திருப்பதாலா நீங்களெல்லாம் பயப்படுகிறீர்கள்? அந்தக் காரியத்தை, அவளைவிடச் சரியாய்ச் செய்வோர் இத்தீவில் வேறு யாருமில்லை. ஆகையால் அந்த அம்மாள் நம் விஷயத்தில் மிக்க அன்பு காட்டியே யிப்படிச் செய்தார்கள். இதனுல் நாம் நம்மேளிக்கையைக் கெடுத்துக் கொள்ளலாகாது. அதற்குமாருக இன்னும் அதிக சந்தோஷமாகவே நாம் நமது கேளிக்கையை நடத்தவேண்டும்." என்றார்.

சற்றுநேரம் ஒருவரும் பதில் கூறவில்லை. அதன்மேல் தைரியநாதம் பிள்ளை மறுபடி கூறத்தொடங்கி "என் சுற்

றத்தாள் இந்தக் கேளிக்கையில் குறிசொல்பவளாக அமர்ந்தபோது ஒருவரும் போய்க் குறி கேட்காமல் அவளை யலட்சியம் செய்தார்கள் என்ற வசைச்சொல் உண்டாகலாகாது. ஆகையால் நானே முதலாவதாகச் சென்று குறி கேட்கிறேன். ஆனால் நான் வாலிபனாக விருந்தபோது என் வாக்கினின்று வந்தது போன்ற கவி இப்போது வராது; ஆகையால் ஒ பைரவிகிருஷ்ணப்பரே! நீர் எனக்கு உதவியாகப் பக்கத்திலிரும்" என்றார்.

அதன்மேல் அவர்களிருவரும் தங்கள் கரங்களைக் கோத்துக்கொண்டு கூடாரத்தி னருகிற் சென்றார்கள். தைரியநாதம்பிள்ளை தாம் கேட்க விரும்பும் சங்கதியைக் கிருஷ்ணப்பனிடம்கூறினார். அது அந்த நாட்டாரின் வழக்கப்படி கப்பல் யாத்திரை, மீன்வேட்டை, கடல் வர்த்தகம் இத்தகைய விஷயங்களைப் பொறுத்ததாகவே யிருந்தது. அச்சங்கதியை கிருஷ்ணப்பன் பின் வருமாறு பாட்டாய்க் கூறி நாகம்மாளைக் குறிகேட்டான்.

"கரிய மேனியளே கண்டோ ரஞ்சும்
நல்லதோர் பிச்சி நாகம் மாளே
இங்கு நடப்பவை யெல்லா மறிவாய்
முழங்கு மழையி லும் மூடுபனியி லும்
உலக நிகழ்ச்சியொவ் வொன்றையு மறிவாய்
வடக் கிலுள்ள மலைக்குகை களையும்
கடற்கரை களையுநீ காண்பாய் பனிமிக
உறைந்த கடலி லொருநா வாய்தான்
திமிங்கிலந் துரத்திச் சென்றதக் கப்பல்
மீனைப் பிடித்ததா இல்லையா வென்பதைத்
தெரியு மாறுநீ செப்பிட வேண்டுமே"

அவர்கேட்ட குறி யுண்மையாகவே தோன்றியது.

யாவரும் மிக்க ஆவலோடு நாகம்மாளின் பதிலையெதிர் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

நாகம்மாள் பின் வருமாறு பதில் சங்கதியைக்கூறினாள்:—

“ இங்குள விருத்தரின் எண்ணமோ கப்பலில்
தங்கிய பொருளிலும் சார்ந்தமீன் பிடிப்பதன்
மேலும் உழவிலும் விரும்புகால் நடையிலும்
ஆட்டுமந் தையிலும் அதிக ஊதியம்
தான்வரு மோவெனத் தாடியைத் தடவி
இருக்கின் றனர்அவை யெல்லாம் பயன்தரும்
கவலையிங் கொழிக கருத்தினிற் றனே.”

அவற்றைக் கேட்டதும் யாவரும் சற்றுநேரம் மௌன மாகவிருந்தார்கள். அச்சமயம் எல்லப்பப்பிள்ளை குசுகுசு வென்று “இத்தகைய பத்துக்குறி யாட்கள், அல்லது எட்சணி வித்தைக்காரிகள் கூறியபோதிலும் இதை நான் நம்பமாட்டேன்; மரியாதையும் நாணயமுமான ஒரு மனிதன், தன் கால் நடைகளும் பயிரும் சரியாய்ப் பலன்தரக் கூடியனவாயிருந்தால் அப்படித் தாடியை யவலட்சணமாகத் தடவிக்கொண்டிருக்கமாட்டான்” என்றான்.

ஆனால் அதற்குள் இவன் சம்பாஷணையைத்தடுப்பது போல் மறுபடி கூடாரத்திற்குள்ளிருந்து நாகம்மாளின் குரல் பின்வரும் மொழிகளாக வெளிவந்தது:—

“ ஏற்றவக் கப்பல் இலவனூர்க் கடலில்
காற்றனு கூலங் காட்டுவ தாலே
செல்கின்ற ததனில் சேர்ந்தவர் ஏழு
மீன்களைப் பிடித்தார் மீன்களின் தாடை
எலும்புகள் கொடிமரம் இசைந்தபாய் மரங்களில்
தூங்குகின் றனவே சொல்லுமம் மீன்களில்

இலக்குமி புரத்திற் கிரண்டுங் கிரிபுரந்
தனக்கிரு மீனும் தக்க பார்க்கவ
புரிக்கு மூன்றும் புதுமையோ டனுப்பப்
படுமே யிவற்றின் பண்பு காண் பீரே"

அம்மொழிகளைக் கேட்டதே ஹாக்கர் சுந்தரம்பிள்ளை "ஓ! கடவுளே நம்மேல் கருணைகூர்ந்து நம்மைக் காப்பாற்றவேண்டும். இச்சங்கதியைக்கூறச் சாதாரணமான ஒரு ஸ்திரீயின் வல்லமையைவிட அதிகமான சக்திவேண்டும். இலவனூரிலுள்ள "உலகம்" என்ற கப்பலைப்பார்த்தவர்களை நான் கண்டேன். அக்கப்பலில் நமது தலைவராகிய தைரியநாதம் பிள்ளைக்குப் பெரும் பாகம் சொந்தம்; ஏன் அக்கப்பலே இவருடையதென்று சொல்லலாம். அக்கப்பலிலிருந்து காட்டப்பட்ட குறியால் ஏழு மச்சங்கள் அகப்பட்டனவென்பது தெரிகிறது. அவை நாகம்மாள் தன் குறிக்கவியில் கூறியதற்குச்சரியாகவேயிருக்கின்றன" என்றான்.

அச்சம்பாஷணையைக் கேட்ட குலசேகரன் "உம் சரியாக ஏழுமச்சங்களா? நீ யவ்வாறு வட இராஜபுரியில் கேள்விப்பட்டாயா? அது ஒரு நல்ல சமாசாரமென்று இங்கு வந்தவுடனே யாவரிடமும் பிரஸ்தாபித்தாயாக்கும்" என்றான்.

சுந்தரம்பிள்ளை:—"உண்மையில் நான் அதையொரு பூதரிடமும் கூறவில்லை. அநேகம் ஹாக்கர்கள், யாத்திரை செய்யும் வர்த்தகர்களின் காரியஸ்தர்கள் ஒரு ஊரில் நடப்பதை மற்றொரு ஊரில் போனதும் கூறுவதைப் பெரிய வேலையாய்க் கருதுகிறார்கள். ஆனால் நான் அப்படிப்பட்டவர்களில் ஒருவனல்ல. அக்கப்பல் சரக்குக் கொண்டுவந்ததைப்பற்றியே நான் இத்தீவிற்கு வருமுன்பாக மூவர்க்கேகூறினேன்" என்றான்.

குல:—"சரி; அம்மூவரில் ஒருவன் அதைப்பற்றியன்னியரிடம் கூறி விட்டிருப்பான். அத்தகைய சம்பவங்கள் நேர்வது இயற்கையே. அது எப்படியோ தன் செவியில் எட்டியதால் இம்மூதாட்டியதைக் குறியாகக் கூறி விட்டாள்—" என்று கூறினான். ஆனால் இதைக்கேட்டவர்களில் ஒருவரும் இதை யாமோதிக்கவில்லை.

தைரியநாதம் பிள்ளை தம் நாட்டின் இத்தகைய கொள்கைகளை மரியாதையோடு மதிப்பவர். சுற்றத்தாளாகிய நாகம்மாளின் அபூர்வ சக்திகளைப் பற்றித் தாமே சிலாகித்துக் கூறுவிடினும் அவற்றைப்பற்றி யாரேனும் தாழ்வுபடுத்திக் கூறின் அதைச் செவியேற்றுக் கொண்டு பொறுமையாகவிருக்குங் குணமுடையவரல்ல.

ஆகையால் அவர் "நாகம்மாள், "என் நெருங்கிய சுற்றத்தாள்; ஹாக்கர் சுந்தரம் பிள்ளையோடாவது அவருக்கு அறிமுகமானவர்களிடமாவது பேசவில்லை. வடநாட்டாரும், சாதாரணமாய்ப் புதிதாய் இங்கு வருவோரும் காணாத அனேக அதிசயமான விஷயங்களை, இதுகாறும் கண்டறியாதவைகளை அறிந்திருக்கிறாள்" என்றார்.

அவர் கூறியமொழிகளைக் கேட்டதே குலசேகரன் தன் அபிப்பிராயத்தையே சாதிக்க முயலாமல் தலையசைத்துப் பேசாமலிருந்து விட்டான்; அதன்மேல் தைரியநாதம் பிள்ளை "ஓ! தைரியசாலிகளே! யாவரும் முன்சென்று கேளுங்கள். நான் பெற்றது போன்ற சந்தோஷமான விடைகளையே நீங்களும் பெறுவீர்களென்று நம்புகிறேன். தைரியமாக முன் செல்லுங்கள்" என்றார்.

அங்கு இருந்தவர்களில் யார் இரண்டாவது குறி கேட்கச் செல்வதென்பது தடுமாற்றத்தில் வந்துவிட்டது. ஒருவரும் முன் செல்லத் தைரியமாவது பிரியமாவது உடையவர்களாயில்லை.

186517